களத்தில்
23.08.2001 241

எதிரியிடம் ஆயுத பலம் உண்டு. ஆட் பலம் உண்டு. ஆதரவளிக்கும் நாடுகளுண்டு. நாம் தனித்து நின்று போராடுகின்றோம். எமக்கு எந்த நாட்டின் உதவியுமில்லை. ஆனால் எமக்குள்ள ஒரேயொரு பலம் எமது ஆத்ம பலம்தான்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



# சிங்களத்தின் இறுதி ஆயுதம்

தமிழின அழிப்பை தசாப்தங்களாக நடத்திவரும் பௌத்த சிங்களப் பேரினவாதம் தனது இறுதிக்கட்ட ஆயுதமாக, நாசகார இரசாயன ஆயுதங்களைப் பாவிக்க முனைப்புக்கொண்டுள்ளது. நவீன குண்டு வீச்சு விமானங்களையும், நீண்ட தூரம் சென்று தாக்கும் ஆட்டிலறிகளையும், நவீன போர்த்தளபாடங்களையும் நம்பி தனது இனஅழிப்புப் போரைத் தீவிரப்படுத்திய பௌத்த சிங்களப் பேரினவாத அரசின் இராணுவ இயந்திரம், தற்போது இரசாயன ஆயுதங்களையும் தனது, இனஅழிப்புக் கருவிகளில் ஒன்றாக இணைத்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ் மக்களுக்கெதிரான இனஅழிப்பு நடவடிக்கையை, ஸ்தாபனமயப்படுத்தி நடத்திவரும் சிங்களப் பேரினவாத அரசுகள், இனஅழிப்பை இன்னுமொரு படிநிலைக்கு உயர்த்த திட்டமிட்டுள்ளது. சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட ஆர்.பி.ஒ.ஏ சிமெல் எனப்படும், எரியூட்டும் இரசாயன வெடிப்பு முனைகளைக் கொண்ட நாசகார ஆயுதங்களை சிறீலங்கா அரசு வாங்கிச் சேர்த்துள்ளமை தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளதையடுத்து, சிங்களப் பேரினவாத அரசின் நாசகாரத் திட்டமும் கூடவே அம்பலத்திற்கு வந்துள்ளது.

சிறீலங்கா அரசினதும் அரசபடைகளினதும் தமிழ் மக்களிற்கெதிரான ஒவ்வொரு இனஅழிப்பு நகர்வையும் முறியடித்து, தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் மூச்சுடன் வேகம் பெற்றுவரும் நிலையில், சிங்களப் பேரினவாத அரசு, இறுதிக்கட்ட அழிப்பு முயற்சியாக இந்த நாசகார அழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளமை தற்போது வெளிப்பட்டுள்ளது.

சர்வதேச போர்ச்சட்டங்களின் பிரகாரம், அனைத்துலக அளவில் தடைசெய்யப்பட்ட இவ்வாயுதங்கள், தற்போது ரஸ்சியாவில் மட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த ஆயுதக் கொள்வனவை நேரடியாக மேற்கொள்வதால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை உணர்ந்துகொண்ட சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம், இதனை உற்பத்தி செய்யும் ரஸ்சிய கம்பனியிடம் இருந்து, பிரித்தானிய ஆயுத விற்பனைக் கம்பனியினூடாக இறக்குமதி செய்திருக்கின்றது.

எரியூட்டும் இரசாயன வெடிப்பு முனைகளைக் கொண்ட இத்தகை ஆயுதங்கள் சுமார் ஆயிரம் அளவில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்திருக்கின்றது.

சந்திரிகா அரசு சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட இவ்வகை ஆயுதங்களை வாங்கிச் சேர்த்துள்ளமை குறித்து, விடுதலைப் புலிகள் காட்டமான கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

'இப்புதிய ஆயுதங்கள் வடக்குக் கிழக்குப் போர்முனைகளில் பாவிக்கப்பட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்' என, விடுதலைப் புலிகள் சிறீலங்கா அரசை எச்சரித்திருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கட்சிகள், மனித உரிமை அமைப்புக்கள், சிறீலங்கா அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ள இவ் ஆபத்தான சூழ்நிலை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளன.

'இரசாயன ஆயுதங்களைப் பாவித்து இந்த அரசு தமிழ் மக்களை அழிக்க முற்படுவதை, நாசிகள் யூதர்களை அழிக்க முற்பட்ட செயலுடனேயே ஒப்பிடமுடியும். இது ஒரு முழுமையான இனக்கொலை முயற்சி' என, பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் கண்டனம் தெரிவித்திருக்கின்றார்.

இனப்பிரச்சினைக்கு, சமாதான வழிமுறைகள் மூலம் தீர்வுகாணப்போவதாகவும், நோர்வேயின் சமாதான முயற்சியை அரசு நாடியிருப்பதாகவும், தீர்வுப்பொதியை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாகவும் காலத்திற்குக் காலம் புதிது புதிதாக கதைகளைச் சொல்லி, நாட்டு மக்களையும் சர்வதேச சமூகத்தையும் ஏமாற்றிவரும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, கூடவே சமாதான [illegible] நடவடிக்கைகளைப் பலப்படுத்தி வந்திருக்கிறார். ஒவ்வொரு [illegible] முயற்சிக்கும் தடைக்கற்களைப் போட்டு, சமாதான முயற்சிகளைத் திசைதிருப்பி, அவற்றை முடங்கச் செய்து இராணுவ நடவடிக்கைகளில் தீவிரம் காட்டிய சந்திரிகா அரசு, சமாதானம் குறித்த ஆர்ப்பாட்டமான பிரச்சாரங்களைச் செய்தபடி, மறுபுறத்தே, மனித அழிவையும் அவலத்தையும் ஏற்படுத்தும் சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை இரகசியமாக வாங்கிச் சேர்த்திருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமுறைகள் மூலம் தீர்வு காணப்படவேண்டும் என்ற அக்கறை இல்லாதவர் என்பதையும், அதனைவிட மனித குலத்திற்கே விரோதமானவர் என்பதையும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா தனது செயற்பாடுகளின் மூலம் வெளிக்காட்டியிருக்கின்றார்.

சர்வதேச கவனத்திற்கும் கண்டனத்திற்கும் உள்ளாக வேண்டிய நிலையில் சந்திரிகா அரசும் அதன் பாதுகாப்புப் பிரிவும் உள்ளன.

உள்ளே...



புரியாத புதிர்



ஓரங்கட்டியது சமாதான முயற்சியையே



சர்வாதிகார அரசும் மாணவர் எழுச்சியும்

## சிங்களக் குடியேற்ற வாசிகளின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட மத்தியமுகாம், பிரதான பொலிஸ் நிலையம்

# விடுதலைப் புலிகளால் கைப்பற்றி அழிக்கப்பட்டது

மட்டக்களப்பு அம்பாறை எல்லைப் பகுதியில் அமைந்திருந்த மத்திய முகாம் பிரதான பொலிஸ் நிலையம், 20ம் திகதி நள்ளிரவு விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்காகியது. விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இப் பொலிஸ் நிலையம் உள்ளானபோது, சுமார் நூறு வரையிலான பொலிஸாரும் ஊர்காவல் படையினரும் அங்கு இருந்திருக்கின்றனர் என அறியப்படுகின்றது. நள்ளிரவு நேரம் பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பொலிஸார் கொல்லப்பட்டதுடன், பதினெட்டுக்கும் மேற்பட்டோர் படுகாயங்களுக்கும் காயங்களுக்கும் உள்ளாகினர். பொலிஸ் நிலையத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த விடுதலைப் புலிகள், அங்கிருந்த ஆயுத தளபாடங்களை பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றிவிட்டு, பொலிஸ்நிலையக் கட்டிடங்களை வெடிவைத்துத் தகர்த்தனர். பொலிஸ் நிலையம் தாக்கப்படுவதை அறிந்தும், அதிகாலை நான்கு மணிவரை, அப்பகுதிக்குச் செல்ல சிங்கள இராணுவமும் அதிரடிப் படையினரும் துணியவில்லை.

தாக்குதலை வெற்றிகரமாக நடாத்தி முடித்த விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணிகள், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களுடன் தளம் திரும்பியது. விடுதலைப் புலிகளின் பெண்கள் அணியினரே தம்மைச் சுற்றிவளைத்து ஆவேசமாகத் தாக்கினர் என, தப்பிப் பிழைத்த பொலிஸார் ஒருவர் தெரிவிக்கின்றார்.

தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமான இம்மத்திய முகாம் பகுதியில் இருந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னராக, தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட்டனர். தமிழரின் காணிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். தமிழர்களின் விவசாயப் பூமிகளில் சிங்களக் குடியேற்றவாசிகள், விவசாயம் செய்கின்றனர். தமிழர் பிரதேசத்தில், தமிழர்களை விரட்டியடித்துவிட்டு, சிங்களவர்களைக் குடியேற்றிய சிங்கள அரசு அவர்களின் பாதுகாப்புக்காக அமைத்திருந்த இந்தப் பொலிஸ் நிலையமாகும். அதுவே விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டிருக்கின்றது. இத்தாக்குதலானது கடந்த மூன்றாண்டுகளுக்கு முன் இதே மாதம் 21ஆம் திகதி சிறீலங்காப் படையினரால் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு பின் கொலை செய்யப்பட்ட 3 பிள்ளைகளின் தாயான கோணேஸ்வரியின் நினைவாக நடாத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# மெல்லவும் முடியாமல்... விழுங்கவும் முடியாமல்...

சிறீலங்காவின் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவும், அவருடன் சேர்ந்து மேலும் சில உயர் படையதிகாரிகளும் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும், இராணுவ ஆயுதக் கொள்வனவில் மேற்கொள்ளப்பட்ட ஊழல் சம்பவத்தை வெளிக்கொணரும் முயற்சியொன்றில், சிறீலங்காவின் தமிழ் மக்களுக்கெதிரான நாசகாரத் திட்டமொன்றும் அம்பலத்திற்கு வந்துள்ளது. கடந்த 12ம் திகதி, கொழும்பில் இருந்து வெளிவரும் 'சன்டே லீடர்' என்ற ஆங்கிலப் பத்திரிகை இவ்விவகாரத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.

ரஸ்சியாவில் உற்பத்திசெய்யப்படும், ஆர்.பி.ஓ-ஏ. ஸ்மெல் எனப்படும், இரசாயன வெடிப்பு முனைகளைக் கொண்ட ஆயுதங்களை வாங்குவதில், பல கோடி ரூபாவிற்கு மேல் இராணுவ உயர் அதிகாரிகளுக்கு லஞ்சமாக வழங்கப்பட்டுள்ளதை' சன்டே லீடர்' பத்திரிகை பூரண தகவல்களுடன் அம்பலத்திற்குக் கொண்டுவந்தது.

இதில், 'இராணுவத் தளபதியும், இராணுவ உயர் அதிகாரிகளும் இவ் ஆயுதக் கொள்வனவு ஊழல் விவகாரத்தில் சம்பந்தப்பட்டார்கள் என்ற பிரச்சினை பின்தள்ளப்பட்டு, தற்போது, அனைத்துலகப் போர்ச்சட்டங்களின்படி, அனைத்துலக ரீதியில் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை சிறீலங்கா வாங்கிச் சேர்த்தவை பிரச்சினைக்குரிய முக்கிய விவகாரமாகியுள்ளது.

இந்த உண்மை வெளிவந்தமை குறித்து, ஆரம்பத்தில் அதிகம் அலட்டிக்கொள்ளாமல், தனக்கே உரித்தான அலட்சியப்பாணியில் பதிலளித்த சிறீலங்கா அரசு, இந்தப் பிரச்சினையின் ஆழ அகலத்தை தற்போது நன்கு புரிந்துகொண்டு, உண்மையை மறைக்க முனைகின்றது.

இச்செய்தி வெளிவந்த இரு தினங்கள் கழித்து, 14ம் திகதி, பிபிசி. செய்தியாளர், சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரத்தினாவுடன் தொடர்புகொண்டு, சிறீலங்கா அரசு இரசாயன ஆயுதங்களை வாங்கியிருப்பதாக வெளிவந்திருக்கும் செய்திகள் குறித்து வினவியுள்ளார். இதற்கு சற்று திமிர்த்தனமாகப் பதிலளித்த சனத் கருணாரத்தினா, இவ்வகை ஆயுதங்களை சிறீலங்கா அரசு வாங்கியுள்ளதாக வெளிவந்த செய்திகளை மறுக்காமல் அதனை ஏற்றுக்கொண்டார். ஆனால் அவற்றை தாம் பாவிக்கவில்லை எனத் தெரிவித்த அவர், அதனைப் பாவித்தாலே இதுபற்றிய கேள்வி எழச் சந்தர்ப்பம் இருப்பதாக தெரிவித்தார். அத்துடன் நின்றுவிடாமல், உலக நாடுகளில் அணு ஆயுதங்கள் மற்றும் அழிவுதரும் ஆயுதங்களை ஏனைய நாடுகள் தம்வசம் வைத்திருப்பதையும் அவர் அச்சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

16ம் திகதி, இவ்விவகாரம் குறித்த விடுதலைப் புலிகளின் கண்டன அறிக்கை வெளிவந்தது. சிறீலங்கா அரசு இரசாயன ஆயுதங்களை வாங்கிச் சேர்த்துள்ளமை குறித்து தமது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்திய விடுதலைப் புலிகள், இவ் ஆயுதங்கள் பாவிக்கப்படுமிடத்து பாரதூரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டிவரும் எனவும் சிறீலங்கா அரசை எச்சரித்திருந்தனர். அத்துடன், தடைசெய்யப்பட்ட இவ்வகை ஆயுதங்களை சிறீலங்கா அரசு வாங்கிச் சேர்த்துள்ளமை குறித்து சர்வதேச சமூகம் கண்டனம் தெரிவிப்பதுடன், சிறீலங்கா அரசை அச்சுறுத்த வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

இவ்வாயுதங்களை வாங்கிச் சேர்த்திருப்பதை ஒத்துக்கொண்ட இராணுவப் பேச்சாளர் சனத் கருணாரத்தினா, பின்னர், அவ்வகை ஆயுதங்களை பாவிக்கும் எண்ணமோ அவற்றைப் பலப்படுத்தும் எண்ணமோ அரசுக்குக் கிடையாது எனத் தெரிவித்தார்.

இதுவிடயத்தில் அலட்சியப்போக்கில் இருந்த சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகளின் கடுமையான கண்டனத்தையும், எச்சரிக்கையையும் அடுத்து பிரச்சினையின் தீவிரத்தை உணர்ந்துகொண்டோ என்னவோ, மறு நாள், இவ்வாயுதக் கொள்வனவு குறித்து மறுத்தது. வாங்கப்பட்டவை இரசாயன ஆயுதங்களே அல்ல எனவும், அவை தடைசெய்யப்பட்ட ஆயுதங்களே அல்ல எனவும் சிறீலங்கா தரப்பு அறிவித்தது.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல சார்பில், 'சன்டே லீடர்' பத்திரிகைக்கு அச்சுறுத்தும் விதத்தில் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. இப்படியான செய்திகளை வெளியிடுவது தேசத் துரோகச் செயல் எனவும், இப்படியான செய்திகளை வெளியிடுவதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஆயுத பேர ஊழலில் தானோ, தனது அதிகாரிகளோ சம்பந்தப்படவில்லை எனவும் அவர் கடிதத்தில் தெளிவுபடுத்தியிருந்தார்.

பொறுப்பற்ற முறையில் இச்செய்தி பிரசுரிக்கப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டிய சிறீலங்கா இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, இப்படியான செய்திகள் எதிரிகளுக்கே உதவியாக அமையும் எனவும் தெரிவித்திருந்தார்.

இச்செய்தி வெளிவந்தமை குறித்து, இரண்டு விதமான பாதிப்பை சிறீலங்கா பாதுகாப்புத்துறை சந்தித்துள்ளது. தமிழ் மக்களுக்கெதிராக பயன்படுத்துவதற்காக இரகசியமாக வாங்கிச் சேர்க்கப்பட்ட இரசாயன ஆயுதங்கள் குறித்த விடயம் அம்பலத்திற்கு வந்துள்ளமை. மற்றும் ஆயுதக் கொள்வனவில் மேற்கொள்ளப்பட்ட பல கோடி ரூபா ஊழல் வெளிவந்துள்ளமை.

முதலாவது, சர்வதேச ரீதியான கடுமையான பார்வையை சிறீலங்கா அரசு மீது ஏற்படுத்தச் செய்வது. மற்றையது, சிங்கள இராணுவக் கட்டமைப்பில் ஏற்படுத்தக்கூடிய தாக்கம். களமுனையில் நின்று போர் புரியும் சிங்களப் படையினர் மத்தியில் இவ்விடயம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதுடன், உயர்மட்ட அதிகாரிகளின் சுய லாபங்களுக்காக தாம் அர்த்தமற்ற முறையில் உயிரைப் பலிகொடுப்பதா என்ற விழிப்பு ஏற்பட்டுவிடும் பாதிப்பை சிங்களப் பாதுகாப்புத்துறை சந்திக்கும்.

இதனைக் கருத்திற்கொண்டே, இராணுவத்தளபதி சன்டே லீடர் பத்திரிகைக்கு தனது கடுமை தொனிக்கும் கடிதத்தை அனுப்பிவைத்திருக்கின்றார் என்று கொள்ளமுடியும்.

சிறீலங்கா அரசு, இரசாயன ஆயுதக் கொள்வனவை மறைக்க தற்போது பெரிதும் முயன்று வருகின்றபோதும், உண்மையை மறைக்கமுடியாத அளவில், பல துப்புக்களை அது வழங்கியுள்ளது.

ஆர்.பி.ஓ-ஏ. சிமெல் எனப்படும், இவ்வகை ஆயுதங்களை, சிறீலங்கா அரசு நேரடியாகக் கொள்வனவு செய்யவில்லை. சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட இரசாயன ஆயுதமாகையால், நேரடிக் கொள்வனவிற்கான வாய்ப்பில்லை. ஆகையால் இரகசியமான முறையில், பிரித்தானிய ஆயுதத் தரகுக் கம்பனி ஒன்றிற்கூடாக, இவ்வாயுத பேரவிவகாரம் கையாளப்பட்டது என்பது வெளிப்பட்டிருக்கின்றது.

இரகசியமான முறையில், உக்ரேன் ஆயுத உற்பத்திக் கம்பனி ஒன்றிடம் இருந்து, பிரித்தானிய ஆயுத தரகுக் கம்பனி ஒன்றிற்கூடாக, சிறீலங்காப் பாதுகாப்பமைச்சகம் இவ்வகை ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததில், இராணுவத்தளபதி உட்பட இராணுவ அதிகாரிகளால், பலகோடி ரூபா ஊழலை மேற்கொள்ள முடிந்திருக்கின்றது என்பது 'சன்டே லீடரின்' துணிபு.

99ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட ஆயுதங்களுக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டபோதும், 89ம், 91ம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்ட ஆயுதங்களையே மேற்படி ஆயுதக் கம்பனி அனுப்பிவைத்திருக்கின்றது. அத்துடன், இந்த ஆயுத பேரத்தில் பலகோடி ரூபா ஊழல் நடந்திருக்கின்றது. இவற்றை விசாரணை செய்து உண்மையைக் கண்டறிய சிறீலங்கா அரசு தற்போதைக்கு துணியப்போவதில்லை. ஏனெனில், ஊழல் விவகாரத்தை ஆராயப் போனால், சந்திரிகா அரசின் இனஅழிப்புத் திட்டம் அம்பலத்திற்கு வந்துவிடும்.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்கின்றது சந்திரிகா அரசு.

■ ■

## நுணுக்குக் காட்டி

'விடுதலைப் புலிகள் கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீதும், விமானநிலையத்தின் மீதும் தாக்குதல் நடத்தியபோது, அவர்கள் தமது சீருடையை அணிந்திருந்தனர். ஆனால் சிறீலங்கா விமானப்படைக் கொமாண்டோக்களோ சரத்தூ-னும் ரீசேட்டு-னுமே இருந்தனர். அத்துடன், விமானப்படை கொமாண்டோக்கள், தம்மில் ஒருவரைத் தாமே சுட்டுக்கொன்றும் உள்ளனர்.'

**சிறீலங்காவின் முன்னாள் விமானப்படைத்தளபதி எயா மார்சல் ஹரி குணத்திலகா.**

இலங்கையின் அரசும் அரசாங்க [illegible] ரும் அரசுக்கெதிரான கருத்தைக்கொண்ட அனைவரையும் புலிகள் எனவும், புலி ஆதரவாளர்கள் எனவும் முத்திரை குத்தி அவர்களுக்கு சகல விதமான நெருக்கடிகளையும் கொடுப்பதில் ஆர்வமாகச் செயற்படுகின்றன.

**[illegible] (12.08.2001 [illegible])**

நாட்டில் இன்று ஒரு அரசாங்கம் கிடையாது. பாராளுமன்றம் மூடப்பட்ட நிலையில் ஜனாதிபதி மட்டுமே நாட்டை ஆள்கின்றார். இந்த அரசு பதவிக்கு வந்த நாள்முதல் நாட்டின் ஸ்திரத்தன்மை படிப்படியாகக் குறைந்து இன்று அது அடிமட்டத்துக்கே சென்றிருக்கின்றது.

**வர்த்தக சம்மேளனக் கூட்டமொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க (21-08-2001 தினக்குரல்)**

'சிங்களப் படையினிட்ட பெரிய பெரிய ஆயுதங்கள் இருந்தும் எங்கட பிள்ளையள் [illegible] பெரும் தாக்குதலை நடத்திருக்கினம். [illegible] எங்கட [illegible] இருக்கிறம்.'

**[illegible] 20.08.2001)**

இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்து கொண்டுபோகும் இவ்வேளையில் இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருப்பது தமிழ் மக்களுக்கு எதிரான அரசாங்கத்தின் யுத்த வெறியையே காட்டுகின்றது.

**மலையக மக்கள் முன்னணித் தலைவர், பெ.சந்திரசேகரன் (தினக்குரல் 20-08-2001)**

Liberation Tigers Of TAMIL EELAM

# சிறீலங்கா அரசின் இரசாயன ஆயுதக் கொள்வனவு குறித்து விடுதலைப் புலிகள் கடுமையான கண்டனம்

## பாரதுாரமான விளைவுகளைச் சந்திக்கவேண்டி ஏற்படும் என எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 16.08.2001 அன்று, வன்னியிலுள்ள தலைமைச் செயலகத்தில் இருந்து விடுத்த அதிகாரபூர்வமான அறிக்கையில், சிறீலங்கா அரசு சமீபத்தில் வாங்கியுள்ள நவீன இரசாயன ஆயுதங்கள் குறித்து கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளது. இப்புதிய ஆயுதம் வடக்கு கிழக்குப் போர்முனைகளில் பாவிக்கப் பட்டால் பாரதுாரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும், விடுதலைப் புலிகள் சந்திரிகா அரசிற்கு கடும் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

'எரியூட்டும் இரசாயன வெடிப்பு முனைகளைக் கொண்ட இந்நவீனரக ஆயுதங்களை சிறீலங்கா அரசாங்கம் வாங்கியுள்ளதை அறிந்து நாம் கவலை அடைந்தோம். ரஸ்சியாவில் உற்பத்தி செய்யப்படும் இவ்வாயுதம் சர்வதேச ரீதியாக தடைசெய்யப்பட்டது. ஏவுகணையாக செலுத்தப்படும் இவ்வாயுதம் தீப்பிழம்பாக வெடிக்கும்போது, அதிலிருந்து வெளியாகும் நச்சுவாயு போராடுபவர்களுக்கும் பொதுமக்களுக்கும் உயிராபத்தை விளைவிக்கவல்லது. இந்தத் தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை வாங்கிக் குவித்திருப்பதன் மூலம் சிங்கள அரசானது ஈழப்போரை ஒரு புதிய, ஆபத்தான பரிமாணத்திற்கு விரிவாக்கம் செய்துள்ளது' என விடுதலைப் புலிகளின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'ரஸ்சியாவைத் தவிர உலக நாடுகளின் தேசிய இராணுவங்கள் இவ்வாயுதப் பாவனையை தடைசெய்துள்ளன. போர் நியமங்களுக்கு விரோதமானதும், ஆபத்தான விளைவுகளை உண்டுபண்ணுவதுமான இந்த இரசாயன ஆயுதத்தைப் பெற்றிருப்பது பற்றி சிங்கள ஆட்சியாளர்கள் எவ்வித மனக்கிலேசமும் அடைந்ததாகத் தெரியவில்லை. வடக்கு கிழக்குப் போரில், பாரிய உயிர்ச்சேதம் ஏற்படுத்தும் நவீன ஆயுத தொழில்நுட்பத்தை அறிமுகப் படுத்துவதன்மூலம் சிங்கள அரசானது தனது போர் வெறியை அம்பலப் படுத்தியுள்ளது. அத்தோடு, இராணுவத் தீர்வில்தான் அரசிற்கு உறுதியான நம்பிக்கையுண்டு என்பதையும் வெளிப்படுத்திக் காட்டியுள்ளது. இந்தப் புதிய திருப்பமானது, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு பேரிடியாக அமைந்துள்ளது. தமிழர் தாயகத்திலுள்ள பட்டினங்கள், கிராமங்கள் மீது தற்போது தொடர்ச்சியாக நிகழ்ந்துவரும் விமானத் தாக்குதல்களும் சமாதானத்திற்கான சூழ்நிலையை சிதைத்துவருகின்றன' இவ்வாறு விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மிகவும் ஆபத்தான, தடைசெய்யப்பட்ட இரசாயன ஆயுதங்களை சிறீலங்கா அரசு வாங்கியுள்ளதை சர்வதேச சமூகம், குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், இந்தியா ஆகியன கண்டிக்கவேண்டும். அத்தோடு, இவ்வாயுதங்களைப் பாவிப்பதால் ஏற்படும் பயங்கர விளைவுகள் பற்றியும் சிங்கள அரசிற்கு அச்சுறுத்தல் விடுக்கவேண்டும்' என விடுதலைப் புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. ●

# சிறீலங்கா அரசு இரசாயன யுத்தத்திற்கு தயாராகின்றது

## தமிழர் மனித உரிமை மையம் அறிக்கை

சிறீலங்கா அரசு, தமிழ்மக்களுக்கு எதிராகப் பாவிப்பதற்காக, ரஸ்சியாவில் இருந்து, ஆயிரத்திற்கும் மேற்பட்ட இரசாயன ஆயுதங்களை வாங்கிச் சேர்த்திருப்பது குறித்து, பிரான்சில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் தமிழர் மனித உரிமை மையம் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

சிறீலங்கா அரசு இலங்கைத் தமிழ் மக்களுக் கெதிராக இரசாயன யுத்தத்திற்குத் தயாராகின்றது எனக் குற்றஞ் சாட்டியுள்ள தமிழர் மனித உரிமை மையம், ஏற்கெனவே பலகோடி அமெரிக்க டாலர்கள் பெறுமதியான இரசாயன ஆயுதங்களை, சிறீலங்கா அரசு ரஸ்சியாவிடம் இருந்து கொள்வனவு செய்துள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச ரீதியாக தடைசெய்யப்பட்ட இவ்வாயுதங்களை தமிழ் இனத்திற்கெதிராக பாவிப்பதற்காக சிறீலங்கா அரசு வாங்கிச் சேர்த்திருப்பது குறித்து, கடுமையான கண்டனத்தை தமிழர் மனித உரிமை மையம் தெரிவித்துள்ளது.

இரசாயன ஆயுதப் பாவனைத் தடை ஒப்பந்தத்தில், சிறீலங்கா அரசு ஏற்கெனவே கைச்சாத்திட்டிருப்பதைச் சுட்டிக்காட்டும் தமிழர் மனித உரிமை மையம், அது மட்டுமன்றி, இத்தடை ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் இரசாயன ஆயுத பாவனைத் தடை அமைப்பின் ஆசியக் குழுவின் நிர்வாகக் குழுவில் முக்கிய அங்கத்துவத்தை வகிக்கும் நாடுகளில் ஒன்றாக சிறீலங்காவும் இருப்பதை தமிழர் மனித உரிமை மையம் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழ் மக்களுக்கெதிராக பாவிப்பதற்கே சிறீலங்கா அரசு இவ்வாயுதங்களை வாங்கியுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை எனத் தெளிவுபடுத்தும் தமிழர் மனித உரிமை மையம், ரஸ்சியத் துருப்புக்கள் செச்சினிய மக்கள் மீது இவ்வாயுதங்களைப் பாவித்த போது, ஏற்பட்ட சர்வதேச அழுத்தங்கள், எதிர்ப்புகளையும் சுட்டிக்காட்டுகின்றது.



எரியூட்டும் இரசாயன வெடிப்பு முனைகொண்ட ஆர்.பி.ஓ – ஏ சீமெல் ரொக்கற் லோஞ்சர்

# 'இரசாயன ஆயுதங்களைப் பாவித்து இந்த அரசு தமிழ் மக்களை அழிக்க முற்படுவதை நாசிகள் யூதர்களை அழிக்க முற்பட்ட செயலுடனேயே ஒப்பிடமுடியும்'

## -பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம்

சிங்கள அரசு இரகசியமாகச் செய்த இரசாயன ஆயுத இறக்குமதி, இன்று பரகசியமாகி, ஒரு தாக்கமான விடயமாக உருவெடுத்துள்ளது. சிங்கள அரசு, இந்த இரசாயன ஆயுதக்கொள்வனவை இன்றளவும் மறைக்கவே முற்படுகின்றது. ஆனால், இப்பிரச்சினை இன்று பகிரங்கப்படுத்தப்பட்டு, விவாதப் பொருளாகியுள்ளது. சிங்கள அரசுக்கு நெருக்கடிகளைத் தரவல்ல ஒரு விவகாரமாகிவிட்டது.

தமிழ் மக்களுக்கெதிராக மோசமான அழிவுதரவல்ல இவ்வகை ஆயுதங்களை சந்திரிகா அரசு பாவிக்க திட்டமிட்டதும், அதற்கமைய சர்வதேச போர்ச்சட்டங்களின் பிரகாரம் தடைசெய்யப்பட்ட இவ்வாயுதங்களை வாங்கிச் சேர்த்தமை குறித்தும், தமிழ் அரசியல் கட்சிகள் கண்டனங்களை வெளியிட்டு வருகின்றன.

சந்திரிகாவின் இச்செயலை, யூதர்களை அழிக்க நாசிகள் கைக்கொண்ட இழிசெயலுடன் ஒப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம், 'இது ஒரு முழுமையான இனக்கொலை முயற்சி' என வர்ணித்துள்ளார்.

சிறீலங்காவின் சனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சருமான சந்திரிகாவிற்கு இது தொடர்பாக கடிதம் எழுதிய, பாராளுமன்ற உறுப்பினர் பரராசசிங்கம், இதுபோன்ற பயங்கரமானதும், அழிவுகளை ஏற்படுத்தும் முயற்சிகளை தங்கள் அரசு மேற்கொள்வதன் மூலம் இந்நாட்டிற்கு பெரும் அழிவை ஏற்படுத்துவதுடன், சர்வதேச சமூகத்தின் முன் இந்நாடு ஒதுக்கப்பட்ட நாடாகக் கருதப்படவும் வழிவகுக்கும் எனவும் அவர் தனது கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

'பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை உபயோகித்து தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாசைகளை அடக்கி ஒடுக்கிவிடலாமென்ற கொள்கையைக் கைவிட்டுவிட்டு, நோர்வேயின் சமாதான முயற்சியைத் தொடர்வதுடன், ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கி, அவர்களுடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டிய அவசிய நடவடிக்கையை மேற்கொள்வதே அறிவுடைய செயலாகும்' எனவும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவிற்கு அவர் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பி. சந்திரசேகரன் தனது கண்டன அறிக்கையில், 'இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமாக வீழ்ச்சியடைந்து, எதிர்காலம் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் சந்திரிகா அரசு இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருப்பது தமிழ் மக்களுக்கெதிரான அரசாங்கத்தின் யுத்த வெறியையே வெளிப்படுத்துகின்றது' எனத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கூடிய பதின்மூன்று தமிழ் முஸ்லீம் கட்சிகளோ, சந்திரிகா அரசின் இந்தவகை ஆயுதக் கொள்வனவு குறித்து கண்டனத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளன. இவ்விவகாரத்தை அனைத்துலக ரீதியில் பிரச்சாரப்படுத்த அக்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. தமிழ்மக்களுக்கெதிராக இவ்வாயுதங்களைப் பாவிக்க சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளதையும், இவ்வாயுதங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்தும் விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கும், அனைத்துலக நாடுகளின் தலைவர்களுக்கும் அனுப்புவதற்கு தமிழ்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன. ●

# சிறீலங்காப் பொருளாதாரம் அடிமட்டத்திற்கு கீழ் எவ்வளவு தூரம் சென்றுள்ளது?



அண்மையில் கொழும்பு கட்டுநாயக்கவில் நடாத்தப்பட்ட விமானப் படைத்தள, சர்வதேச விமான நிலைய தாக்குதலினால் ஏற்பட்ட 500 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவ, சிவில் விமானங்கள் அழிக்கப்பட்டது. இலங்கைப் பிரச்சினையின் ஆழத்தை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துக் கூறியிருப்பது மட்டுமல்ல, சிறீலங்காவில் முதலீடு செய்பவர்களையும் அச்சத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றது. இதை கடந்த 10 வருடங்களாக பொருளாதார நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றார்கள் என்று எழுதுகிறார் அன்புராமநாதன்.

இத்தாக்குதலினால் முதல் பாதிப்புக்குள்ளானது நாட்டின் தேசிய விமான சேவையான Sri Lankan Airlines இல் 40 வீதம் பங்குதாரரான Emirates Airlines நிறுவனமே. சிறீலங்கா வான்படையும் தனது சிறிய ரக விமானங்களும், குண்டுவீச்சு விமானங்களுமாக, முழுத்தொகையில் 30 வீதத்தினை இழந்துள்ளது. சிறீலங்கா வான்படை 30 மில்லியன் டொலர் பெறுமதியான இராணுவத் தளபாடங்களை இழந்துள்ளதாக நம்பப்படுகின்றது. Sri Lankan Airlines 350 மில்லியன் டொலர்களை காப்புறுதி நிறுவனத்திடம் கோரியுள்ளது.

சிறீலங்காவின் வரவு செலவுத்திட்டத்தில் 75 மில்லியன் ரூபாய்கள் செலவாகின்றது. அதாவது, தன்னாடும் தேசிய வருவாயில் 6 வீதத்தோடு ஒப்பிடும்போதுதான் இழப்பின் தாற்பரியம் நன்றாகப் புரியும்.

விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை என்றால்போல் கட்டுநாயக்க சம்பவத்தில் அழிக்கப்பட்ட எல்லா விமானங்களும் காப்புறுதி செய்யப்பட்டவை என்று Sri Lankan Airlines முதலீட்டாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் உறுதி அளித்திருக்கின்றது. காப்புறுதிக் கூட்டுத்தாபனங்களின் இழுத்தடிப்புக்களும் சிறு சாக்குப்போக்குகள் கூறி தன் பொறுப்பைத் தட்டிக்கழிக்க வல்லது என்பது மறுப்பதற்கில்லை. இதுவொரு யுத்த செயல் என்று கூறியே, தனது பொறுப்பைத் தட்டிக் கழிக்கலாம். மேலும் சிவில் விமான நிலையம், விமானப்படைத்தளத்திற்கு அண்மையில் இருப்பதும், போர் விமானங்கள் சிவில் விமான ஓடுபாதையை பாவிப்பதும் காப்புறுதி நிறுவனங்களுக்கு போதுமான சாட்டாக அமையலாம்.

மேலும் அதிகப்படியான விமானங்கள் வாடகைக்கு அமர்த்தப்பட்டவையானதால், இந்த விமான அழிப்புக்கள் விமான சேவையை பெரியளவில் பாதிப்பிற்குள்ளாக்கும்.

விமானங்களை வாங்குவதற்கு வங்கிக் கடன்கள் எடுப்பதானால் அந்த விமானங்கள் வங்கிக்கு அடைமானமாக வைத்து 20 வருடத்தில் அவை திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். (இந்த 20 வருடத்தில்) இந்த வர்த்தக விமானத்தின் ஆயுள் வங்கிக் கடனுக்கு காப்புறுதி இன்றியமையாததொன்றாகும். காப்புறுதிகளெல்லாம் சிறீலங்காவோடு தொடர்புடைய எல்லாத்துறைகளுக்கும் தங்கள் காப்புறுதிக் கட்டணங்களை அதிகரித்துள்ளன. இது பயணச்சீட்டுகளின் விலையை அதிகரிக்கும்.

சிறீலங்காப் பொருளாதாரமோ பெரிதும் இழைத்துவிட்டது. இவ்வருட காலாண்டு தேசிய வருவாய் 2000 ஆண்டின் அதே காலத்தோடும், முழுவருடத்தோடும் ஒப்பிடும் போது, 1.3வீதம் குறைவாக உள்ளது. கட்டுநாயக்க தாக்குதலின் பின் தேசிய வருவாய் மேலும் வீழ்ச்சியடையும் என்று அமெரிக்க முதலீட்டாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கட்டுநாயக்க தாக்குதல் உல்லாசப் பயணிகளின் வருகையிலும் நிரந்தரமான பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்த இருக்கின்றது. சிறீலங்காவிற்கு வரும் உல்லாசப் பயணிகளை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது,

1. விடுமுறையைக் கழிக்க வருபவர்கள்.
2. சிறுவர் பாலியலை அனுபவிக்க வரும் உல்லாசப் பயணிகள்.

எனப் பிரிக்கலாம்.

சிறீலங்காவில் அதிகரிக்கும் யுத்த பயத்தால் முதல் குறிப்பிட்ட உல்லாசப் பயணிகள் தொகை குறைந்தாலும், போட்டிபோட்டுக் கொண்டு சிறீலங்கா வரும் இரண்டாவது பிரிவு உல்லாசப் பயணிகளால் வரும் வருவாயை தக்கவைத்திருக்கின்றது. இவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே பயம் யுத்தத்தைவிட அவர்களுக்கு எதிராக அந்த நாட்டினால் எடுக்கப்படக்கூடிய சட்ட நடவடிக்கைகளே.

தாய்லாந்து போன்ற நாடுகளில் இவர்களுக்கெதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனால், இவர்களில் பெரும்பாலானோர் சிறீலங்கா வந்து சேருகின்றார்கள்.

சிறீலங்காவின் தென்பகுதிக் கடற்கரை ஓரங்களில் நடைபெறும் இப்பகிரங்க பாலியல் வியாபாரத்தை அரசாங்கம் பாராமுகமாக இருப்பதனால், இவை போன்ற தாக்குதல்களுக்கும் அஞ்சாது [illegible] சப் பயணிகள் வர்க்கம் சிறீலங்காவிற்கு வரவேற்கப்படுகின்றனர். இவ்வருடம் Test Criket போட்டிகள் சிறீலங்காவில் நடந்ததினால், விளையாட்டுப் பிரியர்கள் சிறீலங்காவிற்கு வருகை தந்தார்கள். இது சுழற்சி முறையில் கிடைக்கும் ஒரு வருவாய். இதில்க்கூட யுத்தத்தின் தாக்கம் ஏற்படாமலில்லை.

சிறீலங்கா இன்றுவரை யுத்தத்தால் ஏற்பட்ட பொருளாதாரச் சுமையை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் (IMF) போன்ற சர்வதேச நிறுவனங்களினால் சலுகை முறையில் வழங்கப்பட்ட குறைந்த வட்டி, வட்டியில்லாக் கடன்களின் மூலம் பளுவை நிவர்த்தி செய்துவந்தது. இந்நிறுவனங்கள் 3ஆம் உலக நாடுகளுக்கு அவற்றின் முன்னேற்றத்திற்கு உதவியாக வழங்குகின்றமையால், நிதி பெறும் நாடுகளின் முன்னேற்றத்தையும் நல்லெண்ணத்தையும் எதிர்பார்க்கின்றது.

> உயர்ந்து கொண்டுபோகும் இலங்கையின் கடந்த வருட இராணுவச் செலவீனத்தை பார்க்கும்போது, இங்குள்ள பிணக்கு ஒரு பற்றை தீ அல்லது ஒரு பகுதியின் உள்நாட்டுக் கலவரம் என்று தட்டிக் கழித்துவிட முடியாது.

கடந்த 5 வருடங்களில் சிறீலங்கா இந்நிறுவனங்களிடமிருந்து 7 பில்லியன் U.S டொலர்களை கடனாகப் பெற்று தனது கோட்டாவை நிறைவு செய்துவிட்டது. கடந்த 2 மாதங்களுக்குமுன் 235 மில்லியன் U.S டொலர்களை சிறீலங்கா அரசு பெரும் நிபந்தனைகளுடன் மிகுந்த சிரமங்கள் மத்தியில் பெறக்கூடியதாக இருந்தது. இவற்றில் முக்கிய நிபந்தனையாக யுத்தச் செலவீனம் வரி அறவீட்டின் மூலம் பெறப்படவேண்டும் என்பதே ஆகும். இதன்படி ஒன்றில் யுத்தத்திற்கு எதுவித பணமும் செலவழிக்க முடியாது. அல்லது இலாபமற்ற வருவாயில் வரிசேர்த்து உபயோகிக்கப்பட வேண்டும். இன்றைய நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்குட்பட்டு சிறீலங்காவால் செயற்பட முடியுமா என்பது ஐயப்பாடு. மேலும் இந்த பணம் வழங்கும் நிறுவனங்கள் ஆர்ஜென்ரீனா, துருக்கி போன்ற நாடுகளில் [illegible] ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை நிவர்த்திசெய்ய பெரிதும் நிற்பந்திக்கப்பட்டிருப்பதால், சிறீலங்காவிற்கு பணம் வழங்குவது கடினமானதொன்றாகும். அதுமட்டுமல்லாமல் அமெரிக்க பொருளாதார தளம்பல் நிலையும் இங்கு கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியதொன்றாகும். தமிழில் சொல்லப்படும் பழமொழி போல 'அமெரிக்கா தும்மினால் ஆசியாவிற்கு குளிர் பிடிக்குமாம்' சர்வதேச நிதி நிலையங்களின் வற்றிப்போன இந்நிதி நிலையில் சிறீலங்கா தனது பொருளாதாரத்தையும் காப்பாற்றி யுத்தத்தையும் கொண்டுநடாத்த வேண்டுமானால் வேறுவழி வகைகளைக் கையாள வேண்டும். இதற்கு வர்த்தக நிதி நிலையங்களிடம் போகலாம். இதில் இரண்டுவகை கடன்கள் உண்டு.

1. சம பங்குகளை விற்றல்
2. கடனாக அல்லது கடன் பத்திரங்கள் மூலம் பணம் பெறுதல்.

முதலாவது வகையின்படி வெளிநாட்டு பங்குதாரர்களுக்கு தேசிய நிறுவனங்களின் பங்குகளை விற்றல். இதில் இலாபமோ நட்டமோ அவர்கள் பொறுப்பாகும்.

இந்த முறையில்தான் தேசிய விமான நிறுவனத்தின் 40 வீதப் பங்கு விற்கப்பட்டிருக்கின்றது.

தேசிய தொலைத்தொடர்பு நிறுவனத்தின் மேலும் 35 வீதப் பங்கை ஜப்பானிய N.T.T நிறுவனத்திற்கு விற்கும் பேரம் பேசல் நடந்து கொண்டிருக்கின்றது. அண்மை நிகழ்வுகளிற்குப் பிறகும் ஜப்பானிய நிறுவனம் பேரம் பேசலில் ஆர்வம் காட்டுவது விசித்திரமாக உள்ளது. இரண்டாவது வகையான முதலீட்டுச் சந்தை கடனாக அல்லது பத்திரங்கள் மூலம் பணம் பெறுவது பத்திரங்கள் மூலம் பெறுவது குறிப்பாக இக்காலகட்டத்தில் கேள்விக்குரியதொன்றாகும். இது முதலீட்டாளர்களின் ஆவலைப் பொறுத்தது. சிறீலங்காவிற்கு தற்போதுள்ள ஒரேவழி கடின நாணயமாக கடன்பெறுவது. (G7 நாடுகளின் கடின நாணயம் ஒன்றை கடனாகப் பெறுதல்) இது ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 2008 வரை உத்தரவாதம் அளிக்கும். மேல் குறிப்பிட்ட கடனை U.S டொலர்களில் திருப்பிக்கொடுக்க வேண்டும். அதுவும் 11 வீதப்படி அதாவது முழுவதுமாகச் சேர்த்து 16 வீதம் அதிகப்படியாகக் கொடுக்கவேண்டும். எனவே இலங்கை ரூபாவில் 16 வீதம் அதிகப்படியாக அமெரிக்க டொலர்களை திருப்பிக்கொடுப்பது முடியுமான ஒன்றல்ல.

அடுத்து சிறீலங்காவிற்கு திறந்துள்ள ஒரேவழி வங்கிக்கடன். வங்கிகள் நாடுகளுக்கும், கம்பனிகளுக்கும், குறைந்த வட்டியில் கடன்களை வழங்குகின்றன. வங்கிகள் இவற்றுடன் எதிர்காலத்தில் ஒரு தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவே இவை கடன்களை வழங்குகின்றன. இது புத்திசாதுரியமான நீண்டகாலத்திட்டமாக கணிக்கப்படுகின்றது. இதன்படி கடன்பெறும் நாடு அல்லது கம்பனி பிறிதொரு காலம் அந்த வங்கிக்கு சலுகைகளை வழங்கவேண்டி ஏற்படும். இப்படியான ஒரு 200 மில்லியன் U.S டொலர் கடனை வழங்க ஜேர்மனி வங்கியொன்று பேச்சுவார்த்தைகளை நடாத்திக்கொண்டிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட தொகைகளைப் பார்க்கும்போது இவை பெரும் தொகைகள் அல்ல. சிறீலங்காவின் இன்றைய வீழ்ச்சியடைந்துகொண்டு போகும் நிலையைப் பார்க்கும்போது, கடன் கொடுக்கும் வங்கிகள் அதி நீண்டகாலம் பலனைப் பெற காத்திருக்க வேண்டியிருக்கும். மேலும் நாட்டின் பிரிவினைக்கான சாத்தியக்கூறுகள் வளர்ச்சியடைந்து போகும் இக்காலகட்டத்தில், சிறீலங்காவுடன் நட்புறவைக் கட்டியெழுப்பும் பாரிய வங்கிகள், உருவாகும் தமிழீழ தேசத்தின் உறவுகளை குறைக்க வேண்டியிருக்கும்.

இறுதியாக இக்காலகட்டத்தில் எந்தவையோ நிதி உதவி தேவைப்படும். நிதி உதவி கோரும் நாடுகள் இன்று அதிகமுள்ளன. இவை கேந்திர முக்கியத்துவம் பெறாவிட்டாலும், அவற்றின் தேவைகள் மதிக்கப்பட வேண்டியுள்ளவை. இதை சர்வதேச சமூகம் கவனத்தில் கொள்ளுமா? அல்லது தேவைக்கு மேலாக உதவிகள் வழங்கப்பட்ட சில நாடுகளுக்கே திரும்பவும் திரும்பவும் உதவிக்கொண்டிருக்குமா?

உயர்ந்து கொண்டுபோகும் சிறீலங்காவின் கடந்த வருட இராணுவச் செலவீனத்தைப் பார்க்கும்போது, இங்குள்ள பிணக்கு 'ஒரு பற்றை தீ அல்லது ஒரு பகுதியின் உள்நாட்டுக் கலவரம் என்று தட்டிக்கழித்துவிட முடியாது' ஒரு அனாவசியமான யுத்தத்தில் இறங்கியிருக்கும் ஒரு நாட்டிற்கு பண உதவி வழங்குவது G7 போன்ற செல்வந்த நாடுகளின் கஜானாவின் முதலாக பெரும் துவாரத்தை ஏற்படுத்தும்.

வர்த்தக வங்கிகள், முதலீட்டுச் சந்தைகள், காப்புறுதி நிறுவனங்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் இந்நிலையில் எதிர்காலம் மந்தமாகவே காட்சியளிக்கின்றது.

பொருளாதாரக் கூற்று ஒன்று சொல்வது போல், சரித்திர பூர்வமாக குறைந்த விலையில் போகும் சம பங்குகள் மேலும் வீழ்ச்சியடையாது என்று சொல்வதற்கில்லை.

# சர்வாதிகார அரசும் - மாணவர் எழுச்சியும்

*யாழ் பல்கலைக்கழக மாணவன் திவ்வியனைக் கைதுசெய்த சிங்களப் படையினர், இக்கைதுக்கெதிரான மாணவ சமூகத்தின் எழுச்சிக்குப் பயந்து, தற்போது நீதிமன்றத்தின் முன் அவரை நிறுத்தியுள்ளது. திவ்வியன் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டதை அடுத்து, பல்கலைக்கழக சமூகமும், தமிழ்மாணவ சமூகமும், தமது போராட்டத்தை ஒத்திவைத்திருக்கின்றன. சாதகமான முடிவுகள் கிட்டாத பட்சத்தில், மீண்டும் ஒரு எழுச்சிக்குத் தயாராக தமிழ்மாணவ சமூகம் காத்திருக்கின்றது.*

தமிழ் மாணவர் சமூகம் மீண்டுமொருமுறை சிங்கள அரசின் அராஜகத்திற்கு எதிராக தனது போர்க்குணத்தை வெளிப்படுத்தி போராடி வருகின்றது. யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் தலைவன் கி. திவ்வியன் அவர்கள் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதைத் தொடர்ந்து அவரை உடனடியாக விடுதலை செய்யக்கோரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

மாணவர்களின் போராட்டத்திற்கு பழிவாங்குமுகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை இழுத்து மூடிய சிங்கள அரசு ஆயிரக்கணக்கான மாணவர்களது எதிர்காலத்தை நிர்க்கதிக்குள்ளாக்க முனைந்தது.

பல்கலைக்கழகத்தை மூடினால் மாணவர்கள் அடிபணிந்து எதிர்ப்புப் போராட்டத்தைக் கைவிட்டுவிடுவார்கள் என அரசு நினைத்தது. ஆனால், கைது செய்யப்பட்ட மாணவர் தலைவனை விடுதலை செய்யுமாறு கோரி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணப் பாடசாலை மாணவர்கள் பாடசாலைப் பகிஷ்கரிப்புச் செய்து எதிர்ப்புப் போராட்டத்தை விரிவாக்கி சிங்கள அரசின் முகத்தில் அறைந்துள்ளனர்.

யாழ்ப்பாண மாணவர் சமூகத்தின் அரச எதிர்ப்புப் போராட்டம் வவுனியா-மட்டக்களப்பு-வன்னி என தமிழர் தாயகம் எங்கும் பரவியது.

முன்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் பிறப்பெடுத்து தமிழீழமெங்கும் பரவி-புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் அரசியல் விழிப்புணர்வைத் தூண்டிய பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வுக்கு சிங்கள இராணுவம் தண்டனை கொடுக்க விரும்பியதே மேற்குறித்த பல்கலைக்கழக மாணவனது கைதும் அவர் மீதான சித்திரவதைக்கும் பிரதான காரணமாகும்.

சிங்கள இராணுவத்தின் எச்சரிக்கைகளையும் மீறி, முன்னர் நடைபெற்ற பொங்குதமிழ் நிகழ்ச்சிக்காக கடுமையாக உழைத்த மாணவர் தலைவர்களுள் திவ்வியனும் ஒருவராவார்.

எழுச்சிக்குக் காரணமான மாணவர்களைத் தனித்தனியாகத் தண்டித்து - அதன் மூலம் ஏனைய மாணவர்களைப் பயமுறுத்தி எதிர்காலத்தில் இத்தகைய அரச எதிர்ப்புப் போராட்டங்களை ஒடுக்க முனையும் சிங்கள அரசின் வழமையான அடக்குமுறைச் செயற்பாடே இந்தக் கைதாகும்.

கைதிற்கும் - சித்திரவதைக்கும் அப்பால் மேலும் ஒருபடி சென்று பல்கலைக்கழகத்தை மூடி, தமிழ் மாணவர்களின் உயர்கல்வியிலும் சிங்கள அரசு கைவைத்துள்ளது.

படையினரால் கைப்பற்றப்பட்ட குடாநாட்டில் நிலைமை வழமைக்குத் திரும்பி மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என உலக சமூகத்திற்குக் காட்டுவதற்காக யாழ். பல்கலைக்கழகத்தை இயங்க சிங்கள அரசு அனுமதித்திருந்தது. ஆனால், சிங்கள இராணுவத்தின் அராஜக ஆட்சிக்கு எதிராக மாணவர்கள் போர்க்கொடி தூக்கியபோது பல்கலைக்கழகத்தை மூடி தமிழரின் உயர்கல்விக்கு ஆப்பு வைக்க முனைந்துள்ளது.

கடந்த சில வருடங்களாக யாழ். கல்விச் சமூகம் சிங்கள அரசினதும்-இராணுவத்தினதும்



அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தும் நோக்குடன் கல்வி கற்றலுடன் அடக்குமுறைக்கெதிரான அரசியற் செயற்பாடுகளிலும் தீவிரமாகப் பங்கு கொள்ளத் தொடங்கினர். இது சிங்கள அரசாங்கத்திற்கு சீற்றத்தை உண்டு பண்ணியது. புலிகளை வேட்டையாடுவது எனக் கூறிக் கொண்டு பல்கலைக்கழகங்களுக்குள் அத்துமீறிப் புகுந்து தேடுதல்களை நடாத்தியும், மாணவர்களை கைது செய்தும் அவர்களை மிரட்டி வந்தது. கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவன் மீதும் புலிச்சாயம் பூசப்பட்டுள்ளது. புலிகளின் பிஸ்டல் குழுவின் உறுப்பினர் அவர் என இராணுவம் குற்றம் சாட்டியுள்ளது. உரப்பையினுள் ஆயுதம் கொண்டு திரிந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பிரசுர இயந்திரங்களை வீட்டில் வைத்திருந்து புலிகளின் அரசியல் பிரச்சாரகர்த்தாவாக செயற்பட்டார் என்றும் இராணுவம் கூறியுள்ளது. இவ்விதம் புலிச்சாயம் பூசப்பட்ட அந்த மாணவனை கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து சட்டநடவடிக்கை எடுத்துள்ளதாக, கைதை இராணுவம் நியாயப் படுத்தியுள்ளது.

அரசபடைகளின் அடக்குமுறைகளை எதிர்த்து பொங்குதமிழ் இரண்டாவது நிகழ்வை விரைவில் ஆரம்பிக்கப்போவதாக பல்கலைக்கழக மாணவர்கள் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இந்த எழுச்சி நிகழ்வை தடுக்கும் நோக்குடன் இந்தக் கைதையும் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீதான அத்துமீறல்களையும் சிங்கள இராணுவம் செய்துள்ளது.

புலிகள் இயக்கம் முன்னெடுத்துள்ள அமைதி முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மறுத்து போரை தொடர்ந்து நடாத்திக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசாங்கம் சர்வதேச அளவில் கறைபட்டுப்போயுள்ளது. இந்த நேரத்தில், பொங்குதமிழ் என்ற பெயரில் மீண்டுமொரு மக்கள் எழுச்சி நடந்தால் கறைபட்டுப்போயுள்ள தனது அரசுக்கு மேலும் இழுக்கு ஏற்படும் என சந்திரிகா அம்மையார் அஞ்சுகின்றார்.

எனவேதான் பல்கலைக்கழகங்களுக்குள் புலிகள் ஊடுருவிவிட்டனர் என்ற பொய்ப் பிரச்சாரம் செய்து, புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுபோல உலகிற்குக் காட்டி, மக்கள் எழுச்சியை நசுக்க சிங்கள இராணுவம் முயல்கிறது.

அடக்குமுறை அரசுகளுக்கு எதிரான மாணவர் போராட்டங்களின் விளைவுகள் எப்படி அமையும் என்பதற்கு பல்வேறு உலகச் சான்றுகள் உண்டு. மாணவர் போராட்டங்களால் அரசுகள் கறைபட்டு, கவிழ்ந்த வரலாறுகள் சிங்கள அரசையும் அச்சமூட்டிக் கொண்டிருக்கின்றன.

ஏற்கனவே திரிசங்கு சொர்க்க நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் கொழும்பு அரசாங்கத்தை தமிழ் மாணவர்களின் அரசியல் போராட்டங்கள் மேலும் சிக்கலான நிலைக்குள் தள்ளிவிடும் என்று அது கருதுகின்றது.

தமிழ் மாணவர்களுக்கு எதிராக இராணுவத்தை ஏவிவிடுவதன் மூலம் உருவாகவிருக்கும் எழுச்சி உணர்வை நசுக்குவதுடன், அதை வைத்து, சிங்கள மக்கள் மத்தியில் இனவாத உணர்ச்சியைக் கிளறி அதன் மூலம் எதிர்க்கட்சியினரை வாயடைக்க வைத்து தனது



அதிகாரத்தைப் பாதுகாக்க சந்திரிகா அரசாங்கம் முயல்கின்றது.

தமிழ்-முஸ்லீம் மக்களால் அவர்களின் நாடாளுமன்றப் பிரதிநிதிகளால்தான் சிங்கள அரசு ஆட்டங்காணுகின்றது. ஆட்சியில் உறுதித்தன்மை இல்லாது போகின்றது என்று பரப்புரை செய்வதில் சிங்களப் பேரினவாதிகள் மும்முரமாய் உள்ளனர்.

இத்தகைய இனவாதக் கருத்துக்களைப் பரப்பியவாறு நாடாளுமன்றையும் செயற்படவிடாது இடைநிறுத்தி, அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றச் சம்மதம் கோரி சர்வசன வாக்கெடுப்பையும் நடத்தப் போவதாக சந்திரிகா அம்மையார் கூறியுள்ளார்.

தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையால் தமிழ் முஸ்லீம் கட்சிகள் குறிப்பிடும்படியான ஆசனங்களைக் கைப்பற்றிவிடுவதுடன், சிங்களக் கட்சிகள் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாத அந்தர நிலையும் உருவாகுகின்றது. அத்துடன் சிறுபான்மைக் கட்சிகளின் பேரம் பேசல் பலத்திற்கும் இந்த தேர்தல் முறை வாய்ப்பளித்து விடுகின்றது என்றும் சிங்களப் பேரினவாதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதனால் தேர்தல் முறையை மாற்றி சிங்கள இனத்தின் அதிகாரத்தை ஆட்சியில் உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப் போவதாக சிங்கள மக்கள் நம்ப வைக்கப்படுகின்றனர்.

முன்னர் இருந்த தேர்தல்முறையை தமிழர்களுக்கு ஆதரவாக உள்ளது என்று கூறியே தற்போதைய விகிதாசார முறைக்கு ஜே. ஆரின் அரசாங்கம் மாற்றியமைத்திருந்தது.

1977இல் சிங்கள நாடாளுமன்றின் எதிர்க்கட்சி என்ற நிலையை தமிழர் விடுதலைக் கூட்டணி பெற்றது. மீண்டும் இவ்வாறானதொரு 'அரசியல் அந்தஸ்து' தமிழர்க்கு ஏற்பட வாய்ப்பளிக்கப்படக்கூடாது என்ற இனவாத எண்ணத்துடனேயே விகிதாசார பிரதிநிதித்துவ முறையை ஜே. ஆரின் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது. ஆனால் இப்போதோ விகிதாசார முறையில் தமிழ் முஸ்லீம் கட்சிகளின் ஆதிக்கம் அதிகரித்துவிட்டது என்று காரணம் காட்டி மீண்டும் தேர்தல் முறையை மாற்றி அமைக்க சந்திரிகா அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இந்த அப்பட்டமான இனவாத உணர்வை உலகிற்கு மறைக்கும் எண்ணத்துடன் அரசியலமைப்பு மாற்றத்திற்கு சந்திரிகா அம்மையார் வேறு காரணங்களைக் காட்ட முயல்கிறார். உறுதியான ஆட்சிக்கும், இனப்பிரச்சினை தீர்வுக்குமான அரசியல் தடையை அகற்றும் எண்ணத்துடனேயே அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்தப் போவதாக அம்மையார் பரப்புரை செய்கிறார்.

கடந்த எட்டு மாதகாலமாக புலிகள் இயக்கம் தீவிரப்படுத்தியுள்ள அரசியல் செயற்பாடுகள் காரணமாக சந்திரிகா அரசாங்கம் என்பது ஒரு போர்வெறிபிடித்த அரசு என்றும் - தமிழினத்திற்காக பகைமை காட்டும் இனவாத அரசு என்றும் சர்வதேச சமூகத்தில் கருத்தாக்கம் ஒன்று வலுவாக ஏற்பட்டு வருகின்றது. இப்போது, தனது அதிகாரத்தை உறுதிப்படுத்தும் நோக்குடன் தனக்கு வாய்ப்பில்லாத நாடாளுமன்றை செயற்படாமல் முடக்கிவிட்டு, தன்னிச்சைப்படி செயற்படமுனையும் சர்வாதிகாரியாக சந்திரிகா அம்மையார் உலக சமூகத்தின் முன்னால் காட்சியளிக்கின்றார்.

சந்திரிகா அம்மையார் பூண்டுள்ள சமாதானத் தேவதை வேடமும் - ஜனாதிபதி என்ற முகமூடியும் சர்வதேச அளவில் அம்பலப்பட்டு வருகின்றது. அதேவேளை தமிழ் மக்களது அரசியல் போராட்டத்தின் நியாயப்பாடுகளும் - புலிகள் இயக்கத்தினது மக்கள் பலமும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக விரைவாக மாறிவருகின்றது. ●



# புரியாத புதிர்

ஆரியக்கதிர்–1,2,3 நடவடிக்கைகள் புலிகள் இயக்கத்தின் போரிடும் திறனை நசுக்கிவிட்டன என்பது, சிங்கள அரசினது கருத்து மட்டுமல்ல, பெரும்பாலான உலக இராணுவ அரசியல் ஆய்வாளர்களும் அவ்வாறே கருதினர்.

பாரிய முகாம் தகர்ப்புகளை புலிகளால் இனிமேல் நடாத்த முடியாது என்றும், அரசிற்கு தலையிடியைக் கொடுக்கும் வகையில் சிறுசிறு தாக்குதல்களை மட்டுமே புலிகளால் நடாத்தமுடியும் என்றும், அவர்கள் கருத்துக்கூறியிருந்தனர்.

சுருக்கமாகச் சொன்னால், தீவிரம் குறைந்த ஒரு போர் முறையை (Low intensive warfare) மேற்கொள்ளவே புலிகளின் தற்போதைய இராணுவ பலம் இடங்கொடுக்கும் என்று, பெரும்பாலான ஆய்வாளர்கள் ஆருடம் கூறியிருந்தனர்.

ஆனால், இத்தகைய படையியல் கணிப்பீடுகள் மற்றும் இராணுவ அபிப்பிராயங்கள் அனைத்திலும் [illegible]

# ஓரங்கட்டியது சமாத

**எல்லாளன்**

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஐக்லண்ட் அவர்கள் சொல்கைமுடன் கொழும்பு வந்துசேர்ந்தபோது சமாதான முயற்சிகள் ஆரம்பகட்ட வெற்றியை அடையப்போகின்றன என்ற நம்பிக்கை பலமடைந்திருந்தது. ஆனால், சமாதான முயற்சியில் இருந்து சொல்கைம் அவர்களை ஓரங்கட்டும் இலக்குடனேயே ஐக்லண்ட் கொழும்பு வரவழைக்கப்பட்டார் என்ற செய்தி பரவியதும் சமாதானம் மலரும் என்ற நம்பிக்கையும் நலிவடைந்துவிட்டது.

இனச்சிக்கலுக்கான அமைதி முயற்சியை அமைச்சரவை மட்டத்திற்குத் தரமுயர்த்த இணக்கம் காணப்பட்டுள்ளது என்று இரண்டு நாடுகளினதும் வெளியுறவுத்துறை கூட்டறிக்கை வெளியிட்டு சொல்கைம் புறந்தள்ளப்பட்ட தகவல் சூசகமாகத் தெரிவிக்கப்பட்டது.

அநுசரணையாளர் அமைதித்தூதர் என்று தான் ஏற்ற பணியை திறம்படச் செயலாற்ற முயன்றதே சொல்கைம் அவர்களை ஓரங்கட்ட ஏதுவாக அமைந்துவிட்டது. தொடர்ந்தும் சொல்கைம் அவர்கள் இந்தப் பணியை ஆற்றிவந்தால் அது சிங்களப் பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆப்பு வைத்துவிடும் என்று சந்திரிகா அரசாங்கம் அஞ்சியது.

புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பு என்றும், இனப்பிரச்சினைக்கான சமாதானத்தீர்வுக்குத் தடையாக புலிகள் இயக்கம் உள்ளது என்பதும் சிங்கள அரசின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

ஆனால், சமாதான வழியில் இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைத்தேட புலிகள் இயக்கம் தயாராகவே உள்ளது என்ற தகவலையும், அதற்காக நோர்வேயுடன் உழைக்க புலிகளின் தலைமைப்பீடம் உறுதியாக உள்ளது என்ற உண்மையையும் சொல்கைம் உலகிற்குத் தெரியப்படுத்தி வந்தார். இது சிங்கள அரசிற்கு சினத்தை ஊட்டியது.

புலிகள் இயக்கம் பற்றிய சொல்கைம் அவர்களின் கருத்துக்களை மறுதலித்து வாதாடமுடியாத சிங்கள அரசாங்கம் அவரை புலிகள் இயக்க அனுதாபி என்றும், தமிழ் இன ஆதரவாளன் என்றும் முத்திரை குத்தி சமாதான முயற்சிகளிலிருந்து அவரை ஓரங்கட்ட இராஜதந்திர முயற்சிகளை எடுத்தனர். இறுதியில் பேச்சு முயற்சியை தரமுயர்த்தல் என்ற போர்வையில் சொல்கைம் அவர்களை ஓரங்கட்டுவதில் சிங்கள அரசாங்கம் வெற்றிபெற்றுள்ளது.

சிங்கள அரசாங்கம் எடுத்த இந்த ஒரு தரப்பான முடிவை அவசரப்பட்டு ஏற்றுக்கொண்ட நோர்வே அரசானது, செயற்திறனுள்ள தனது அமைதித் தூதரை தூரவிலக்கி வைக்கச் சம்மதித்துவிட்டது.

புலிகள் இயக்கத்தைக் கலந்தாலோசிக்காது எடுத்த இந்த முடிவு தவறானது என்று நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் கருத்து நிலவுவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சொல்கைம் ஓரங்கட்டப்பட்டதைத் தொடர்ந்து அமைதி முயற்சியும் தேக்க நிலையை அடைந்துவிட்டது. இந்த தகா நிலைக்கு புலிகள் இயக்கம் எந்தவிதத் திலும் பொறுப்பாகமாட்டாது.

இந்தத் தேக்கநிலையைப் பயன்படுத்தி, தனது இராணுவத்தாக்குதல்களை, விமானக் குண்டுவீச்சுக்களைத் தீவிரப்படுத்தி சமாதான முயற்சிகளை குழப்ப சிங்கள அரசு முயன்று வருகின்றது.



பேச்சுவார்த்தையில் கலந்து

இலங்கையின் இனப்பிரச்சினையை அமைதிவழியில் தீர்த்துவைக்க விரும்பும் உலகநாடுகள் தமிழ்-சிங்கள இனமுரண்பாட்டின் வரலாற்றைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

அமைதி வழியில், இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வுகாண தமிழ்த் தரப்பு எப்போதும் தயாராகவே இருந்துவருகின்றது. ஆனால், அதற்குத் தயாராக சிங்கள அரசு ஒருபொழுதும் இருந்ததில்லை.

முதலில் மூழ்கடித்துவிட்டது.

தென்மராட்சி – வடமராட்சியிலிருந்து போரிடாது பின்வாங்கிய புலிகளின் செயலைப் புரிந்துகொள்ள முடியாது திண்டாடிய இராணுவ உலகம், விடுதலைப்புலிகள் முல்லைத்தீவு பூநகரி, கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு என சிங்களப்படை ஆக்கிரமித்து நின்ற தமிழர் பிரதேசங்களை மீட்டெடுத்தமை குறித்து வியந்து நின்றது.

விடுலைப் புலிகளை பலவீனப்படுத்தி, தனது குடாநாட்டு ஆக்கிரமிப்பு இருப்பை உறுதிப்படுத்த சிங்கள அரசால் நம்பிக்கையுடன்மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் முதுகெலும்பை விடுதலைப் புலிகள் முறித்துப் போட்டமை, விடுதலைப் புலிகள் பற்றிய இராணுவ மதிப்பீட்டை முற்றிலுமாக தலைகீழாக்கியது.

விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டுவிட்டார்கள், அவர்களை குடாநாட்டைவிட்டு விரட்டியடித்தாகிவிட்டது. இன்னும் ஒரு வருடத்தில் விடுதலைப் புலிகளை முற்றாக நசுக்கிவிடலாம் என சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவும், சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தவும் 1995ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும், அதற்குப் பின்னரும் நடத்திய ஆர்ப்பாட்டமான பிரச்சாரங்கள் ஐந்தாண்டுகளின் பின் பரிகாசத்திற்குரியவை ஆகிவிட்டன.



விடுதலைப் புலிகள் ... ம் இராணுவ அதிசயங் ...லும் பலம் பெற்று ஒரு மரபுவழி படையணியாக இன்று மிளிர்கின்றனர். "காற்றுப்புக முடியாத" இடங்களிலும் புலிகளின் அணிகள் புயலெனப் புகுந்து தாக்குதல் நடத்தும் அதிசயங்கள் நிகழ்கின்றன.

விடுதலைப் புலிகள் நிகழ்த்தும் இராணுவ அதிசயங்கள் குறித்து இராணுவ உலகம் வியந்து நிற்கின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் புரிந்து கொள்ளமுடியாது விழிக்கின்றது.

மொத்தத்தில், இராணுவ உலகத்திற்கு அன்றும் இன்றும் புலிகள் இயக்கம் ஒரு புரியாத புதிராகவே உள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# ...ான முயற்சியையே



...கொண்ட நோர்வே பிரதிநிதிகள்

அமைதிவழியில் அரசியல் தீர்வு காணுமாறு இலங்கை அரசிற்கு சர்வதேச நாடுகள் அழுத்தம் கொடுக்கும் போதெல்லாம் ஒப்புக்காக சமாதானக் கோசமிடுவதும் பின்னர் சதிமுயற்சிகள் மூலம் சமாதான சூழலைக்கெடுப்பதும் சிங்களத்து அரசியல் வழமையாகும்.

நோர்வே அரசின் அனுசரணை முயற்சியுடன்கூடிய சமாதானச் செற்பாட்டிற்கும், இப்போது, இந்தக் கதியே ஏற்பட்டுள்ளது.

சொல்கைம் அவர்கள் மேற்கொண்டு வந்த தீவிரமான அரசியல் முயற்சிகளை சர்வதேச இராஜதந்திரிகள் பாராட்டவே செய்தனர். சமாதானப்பாதையில் உள்ள தடைகளை மெதுமெதுவாக அகற்றி, சிங்கள அரசையும், புலிகள் இயக்கத்தையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர அவர் எடுத்த காத்திரமான இராஜதந்திரப்பணிகளை, நடுநிலையைக் கைக்கொள்ளும் எவருமே ஏற்றுக்கொள்வர்.

தம்மீதான தடையை அகற்றி பேச்சுமேசையில் சமத்துவ நிலையை ஏற்படுத்தவேண்டும் என்ற புலிகள் இயக்கத்தின் கோரிக்கையை சொல்கைம் அவர்கள் சரியான திசையில் இட்டுச்சென்றார்.

இந்தக் கோரிக்கையின் நியாயத் தன்மையையும், அது நிறைவேற்றப்பட்டால் எழக்கூடிய அமைதிக்கான வாய்ப்புக்களையும் உய்த்துணர்ந்த சொல்கைம் அவர்கள் புலிகள் மீதான தடையை அகற்றும்படி சிங்கள அரசைத் தூண்டும் நோக்குடன் இந்திய-அமெரிக்கா-இங்கிலாந்து போன்ற நாடுகளின் இராஜதந்திரிகளுடன் கலந்துரையாடல்களை நடாத்தியிருந்தார்.


சொல்கைமின் இந்த முயற்சிகளை சிங்கள அரசு விரும்பவில்லை. அவரின் முயற்சி வெற்றிபெற்றால் புலிகள் இயக்கத்திற்கு சர்வதேச ரீதியாக ஒரு அரசியல் அங்கீகாரம் கிடைத்துவிடும் என்று அது அஞ்சியது. இந்த அங்கீகாரம் பேச்சுவார்த்தை மேசையில் தமிழர் தரப்பின் பேரம்பேசும் நிலைமையையும் உயர்த்திவிடும் என்றும் எண்ணியது.

இந்த நிலையை வளரவிடாது முளையிலேயே கிள்ளி எறிய வழிபார்த்தது. அனுசரணையாளரை அகற்றி, புதியவர் ஒருவரை அரங்கேற்றுவதன் மூலம் இதைச் சாதிக்க எண்ணியது. இத்தகையதொரு சூழ்ச்சிகர நோக்குடனேயே அனுசரணையாளர் மாற்றப்படுகின்றார் என உலக சமூகம் கருதாமல் விடுவதற்காக பேச்சுவார்த்தை தாமதப்படுவதாகவும், அந்தத் தாமதத்துக்கு ஏதுவாக அனுசரணையாளரும் புதிதாக நியமிக்கப்படுகின்றார் என்றும் காரணம் கூறுகிறது.

இனப்பிரச்சினையை அமைதிவழியில் தீர்க்க சிங்கள அரசுடன் நேரடியாகப் பேசுவது எந்தப் பயனையும் வழங்காது என்ற உண்மையை அனுபவ வாயிலாக கண்டுணர்ந்த பின்பே இனிமேல், மூன்றாந்தரப்பு மத்தியஸ்துவத்துடன் பேசவேண்டும், அதுவே பயன்தரும் என்ற முடிவை எடுத்து புலிகள் இயக்கம் அறிவித்திருந்தது. இதன் அடிப்படையிலேயே மூன்றாவது நாடொன்று (நோர்வே) அடையாளம் காணப்பட்டு, இருதரப்பாலும் ஏற்கப்பட்டு சமாதான முயற்சிகள் தொடங்கப்பட்டது. ஆனால், இந்த முயற்சிகளையும் சூழ்ச்சிகர நடவடிக்கைகள் மூலம் குழப்பியடிக்க சிங்கள அரசு முனைகிறது.

சமாதான வழிமுறைகளில் தமிழரின் தேசிய இனச்சிக்கலுக்கு அரசியல் தீர்வு காணும் எண்ணம் சிங்கள அரசிற்கு இல்லை. போர் மூலம் தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணவேண்டும் என்றே சிங்கள அரசு விரும்புகின்றது. இராணுவத்தைப் பலப்படுத்துவதிலும் நவீனப்படுத்துவதிலுமே அரச வளம் செலவழிக்கப்படுகின்றது. புலிகளின் பிரதேசத்திற்குள் ஊடுருவி தாக்குதல்களை நடாத்தி போரை விரிவாக்கி தீவிரப்படுத்துவதிலேயே அரசு கண்ணுங்கருத்துமாக உள்ளது.

இந்த நிலையில், புலிகள் இயக்கம் தொடர்ந்தும் அமைதிப் பாதையில் செல்லவேண்டும் என்று சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பது நீதியாகாது.




மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதி, எதிரி இராணுவ அணியொன்று எம்மால் வழிமறித்துத் தாக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் திகைத்த எதிரி சுதாகரித்துக் கொள்ள சண்டை வலுவடைகின்றது. தனது ரி-56-2ஐ எதிரியை நோக்கி இயக்கியபடி அவன் விரைந்து முன்னேறிக்கொண்டிருந்தான். சீறி வரும் ரவைகளையோ, வீழ்ந்து வெடிக்கும் எறிகுண்டுகளையோ அவன் அதிகம் லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. வீழ்த்தப்பட்ட எதிரியின் சாவை மேலும் இரு ரவைகளால் உறுதிப்படுத்தியவனை, ஒருதிசையில் இருந்து பலகுரல்கள் அழைக்க, தனது முதுகில் தொங்கிக்கொண்டிருந்த அந்த கனத்த தோள்ப்பையை சரிசெய்தவாறு அங்கு விரைகிறான்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களையும், விழுப்புண்ணடைந்த போராளிகளையும் சுமந்து கொண்டு தளம் திரும்புகிறோம். சீரற்ற கானகப் பாதைகள் வழியாக, சிற்றாறுகள் ஊடாக படர்மலைகள் மேலாக பயணம் தொடர்கின்றது. காவுப் படுக்கையொன்றுக்குத் தோள் கொடுத்து அப்போராளியை மாற்றிவிட்டவன், அருகில் வந்த போராளி களைப்பு மிகுதியால் நடக்கச் சிரமப்படுவது கண்டு அவனது ஆயுதத்தையும் தான் வாங்கிக்கொள்கின்றான். கனமான தோள்ப்பை, இரு ஆயுதங்கள், காவுப்படுக்கை, ஆனாலும் அவன் நடையில் எந்தத் தளர்வையும் காணமுடியவில்லை.

'சாண்டோ' இவனை நினைக்கும்போதெல்லாம் இவ்வாறான எண்ணற்ற களக்காட்சிகளே எம்முன் விரியும். மிக அமைதியான சுபாவமும், நல்லியல்புகளும் கொண்ட உயர்வகுப்பு மாணவனான அமுதனின் சிந்தனைகளும் உயர்வானவையாகவே இருந்தன. தேசவிடுதலையின் தேவையையுணர்ந்துகொண்டவன், 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் தன்னைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைத்துக்கொள்கின்றான். பயிற்சி முடித்து வெளியேறியவனுக்கு உடனடியாக களம் காணும் வாய்ப்புக் கிடைக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து இந்திய இராணுவம் வெளியேற ஆரம்பித்த நேரம், அப்பகுதியிலிருந்த இரு பாரிய தேசத்துரோகிகளின் முகாம்கள் எம்மால் தகர்த்தெறியப்படுகின்றன. இந்த முதற் சண்டையே அவனையொரு போர்க்குணம்மிக்க போராளியாக இனங்காட்டியது. தொடர்ந்துவந்த சண்டைகள் இதனை மேலும் உறுதிப்படுத்துபவையாக இருந்தன. இயல்பாகவே அவன் மிக அமைதியானவன், இரக்க சுபாவம் கொண்டவன். ஆனால் களங்களில் மட்டும் அவன் இவற்றிற்கு நேரெதிராகவே இருந்தான்.

நெடுந்தூர வேவுப் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டபோது அவனும் அதில் இணைத்துக்கொள்ளப்படுகின்றான். அவனது தாங்குமாற்றல், பொறுமை, போர்க்குணம் என்பன இப்பயிற்சிநெறியைத் திறம்படச் செய்ய அவனுக்குப் பெரிதும் உதவின. பின்நாட்களில் அவனது வேவுப்பணி விரிவடைந்து பயன்மிக்க விளைவுகளை எமக்குப் பெற்றுத்தந்தது.

வேவு, சண்டையென தன்னை நன்கு நிலைப்படுத்திக்கொண்டிருந்தவனுக்கு எதிர்பாரா இடமொன்றில் இருந்து அழைப்பு வருகின்றது. 'சாண்டோவை மெடிசின் படிக்கப் போகட்டாம்' இது அவனுக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடியதொரு விடயம் அல்லவாயினும், விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு கட்டளையை நிறைவேற்றும் உயர் இராணுவ ஒழுக்கத்தை அவன் காட்டினான். 'உத்தரவு நிறைவேற்றும்' என்றவகையில் ஆரம்பத்தில் இது அமைந்திருந்தாலும் பின்நாட்களில் அதற்கென அவன் ஆழ்ந்துபோனான். களமருத்துவப் பயிற்சியை நிறைவுசெய்தவனை சிறப்புத் தளபதி சந்தித்துக் கதைத்தபோது 'எல்லாச் சண்டைக்கும் என்னை விடோணும்' என்பது மட்டுமே அவனது ஒரே கோரிக்கையாக இருந்தது.

பொதுவாக எமது போராட்ட வாழ்வு கரடுமுரடானது. துன்பங்கள் நிறைந்தது. அதிலும் தென்தமிழீழ போராட்ட வாழ்வென்பது சராசரி மனித தாங்குமாற்றலுக்கு பல்வேறு வழிகளிலும் சவால்விடுவது. இதில் குறிப்பிடத்தக்க ஒன்று மருத்துவம்.

விழுப்புண் அடையும் போராளிகளை காவுப்படுக்கையில் பாதுகாப்பான இடம்வரை காவிவர பல மணிகள் ஏன் நாட்கள்கூட ஆகலாம். உரிய மருந்துகள், உபகரணங்கள் இன்றி 'புதிய வழிமுறைகள்' புகுத்தவேண்டி வரலாம். பாரிய இராணுவ நடவடிக்கைகளில் நெடுந்தொலைவு நகரவேண்டிவரலாம், சுற்றிவளைத்துத் தாக்கப்படலாம், உணவு குடிநீரின்றி இடர்படலாம் இப்படி இன்னும்பல.

சராசரி மருத்துவப் போராளி ஒருவரிடம் எதிர்பார்க்கப்படும், துறைசார் அறிவற்றதாக்கு அப்பாலும் இங்கு செயற்படும் மருத்துவப் போராளியின் கொள்ளளவு விரிவடைய வேண்டிய தேவை இங்கு தவிர்க்கமுடியாததாகின்றது.

களமருத்துவப்பணியை மிகுந்த ஈடுபாட்டுடன் செயற்படத்தொடங்கினான். முதுகில் கனத்த தோள்ப்பை, கையில் அவனது அபிமான ரி-56-2, மார்பில் நான்கு ரவைக்கூடுகள், எறிகுண்டுகள், ஒரு கூரிய கத்தி (இதற்கு தனியே களத்தில் நிறைய அனுபவமுண்டு), நீண்ட தொலைவு நடையில் (சமயங்களில் ஓட்டம்) இவை பலருக்கும் சோர்வுதரும் சுமைகள். அவனுக்கோ சுகமான சுமைகள் 'இவனுக்கென்ன பனிஸ்மென்ரா' பலர் பல சந்தர்ப்பங்களில் கேட்டிருக்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் அவன் தந்த விளக்கம் அந்த ஒரு சிக்கனமான புன்னகையே.

கொடுக்கப்பட்ட எல்லா வேலையையும், நேர்த்தியாகவும், அர்ப்பணிப்புத் தன்மையுடனும் திறம்படச்செய்யும் தன்மைகொண்ட அவன் விரைவிலே தன் மருத்துவப் பொறுப்பாளனாகப் பணிநிலைப்படுத்தப்படுகின்றான். தோள்ப்பை கைமாறியதேயன்றி ஒவ்வொரு சண்டையிலும் அவனது துப்பாக்கி இயங்கிக்கொண்டேயிருந்தது. எதிரியை அவன் ரவைகள் துளைத்தன. அதேபோல் எதிரியின் ரவைகளும் அவ்வப்போது அவன் உடலில் ஆழப் பதியவே செய்தன.

1993 காலப்பகுதி, தவளை நடவடிக்கைக்காக பெருந்தொகையான போராளிகள் வடபுலப் போர்முனைக்குச் சென்றுவிட்டிருந்த நேரம். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய சிறீலங்கா படைத்தரப்பு 'கூமா' என்ற பெயரில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தது எம் தாயகதேசம் எங்கும் அதனை விரிவுபடுத்தியது. [illegible] படையினரை உடனடியாக ஆங்காங்கு பெரும் முகாம்கள் நிறுவப்பட்டன. இருந்தால் சுற்றிவளைப்பு நகர்ந்தால் பதுங்கித் தாக்குதல் என்ற நிலைமை. இன்னும் போராளிகளால் நினைவு கூரப்படும் 'கஞ்சிப்பிரச்சினை', 'செல்லப்பேபி' போன்ற அருஞ்சொற்பதங்கள் அறிமுகமாகிய அந்த நாட்கள்...

அவனே அந்த நகரும் மருத்துவமனையின் பொறுப்பாளனாக இருந்தான். பாறை ஒன்றில் சிந்தனை வசப்பட்டவனாக இருந்தவனிடம் 'என்ன சாண்டோ கடும் யோசினை' எனக் கேட்கின்றோம். 'மூன்று நாளா பொடியன்களுக்கு ஒன்றும் இல்லை' மிகுந்த கவலையுடன் அவன் கூறினான். அன்று மதியம் மருத்துவப் பகுதியில் அவித்த இறைச்சி வழங்கப்பட்டதாக அறிகிறோம். இதுபற்றி அவனிடம் கேட்டபோது, 'ஒன்றும் அல்லடா ஒரு பெரிய கவுதொரப்பா' பிடிச்சனான் அவிச்சு போனோம் நாம். நச்சுப்பிராணி என ஒதுக்கும் பிராணி. 'உரிச்சுப்பார்த்தன் வடிவான கோழி போல இருந்தது. எடுத்துப்போட்டு அவிச்சு சாப்பிட்டும் பார்த்தன் ஒன்றும் செய்யல்ல அதுதான்...'

மாவட்ட மருத்துவப் பொறுப்பாளனாக அவன் நியமிக்கப்பட்டான். அந்த வேளைகளிலெல்லாம் போராளிகளின் நலன்பேணல் நடவடிக்கைகளில் தனது ஈடுபாட்டை மிகுதியாக ஈடுபடுத்தலும் அவன் தவறவில்லை. அவனது இருப்பிடத்தைச் சுற்றி பயன்தரும் பயிர்வகைகள் பச்சைப்பசேலென காட்சிதரும். மண்வெட்டி பிடித்து அவன் கைகள் கன்றிப்போயிருக்கும். [illegible] விளங்குமாறு கட்டும் அவன் கைகள் காயப்பட்டிருக்கும். சமயங்களில் நிறைந்துவிட்ட மலக்குழியை அவன் கைகள் தனியே நின்று இறைத்துச் சுத்தம் செய்யும். 'என்னடாப்பா சாண்டோ ஆரும் பொடியன்களை பிடிச்சு செய்யலாந்தானே' இதற்கும் அவனிடமிருந்து அந்தச் சிக்கனமான புன்னகையே பதிலாகக் கிடைக்கும்.

தென்தமிழீழ தென் எல்லையான பூமுனை தொடக்கம் திருமலை வரை அனுபவம் கொண்டு கடமையாற்றியவனை வடதமிழீழ போர்முனை அழைக்க ஏராளமான எதிர்பார்ப்புகளுடன் அவன் புறப்படுகிறான். ஒவ்வொரு போராளிகளுக்குள்ளும் இருக்கும் தம் தலைவனை ஒரு முறையாவது பார்த்துவிடவேண்டுமென்ற துடிப்பு அவனிடம் நிச்சயம் இருக்கவே செய்தது. தனது தலைவன் மேல் அவன் மிகுந்த பற்று அல்ல பக்தியையே கொண்டிருந்தான். இது தவிரவும் தன்மையில் உயிர்விட்ட கப்டன் [illegible] கடைசி வரிகள் தந்த தாக்கமும் விரைவில் தலைவனைச் சந்திக்க வேண்டும் என்ற உணர்வை மேலும் வலுப்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. 'மச்சான் நான் சாகப்போறன் என்று எனக்கு நல்லாத்தெரியும். நான் அதுக்குக் கவலைப்படல்ல. ஆனா தலைவரைப் பார்க்காம சாகிறதுதான் பெரிய கொடுமை.'

முக்கியமான சில மருத்துவப் பொருட்களைப் பெற்றுச் செல்ல வடதமிழீழத்திலிருந்து அன்றுதான் அவன் வந்து சேர்ந்திருந்தான். நீண்ட தொலைவு நடையால் உடன் வந்தவர்கள் எல்லாம் 'அப்பாடா' என்று ஆங்காங்கு சரிந்து கிடக்க, அவன் அவசர அவசரமாக தனது ரி-56-2ஐ சுத்தம் செய்துகொண்டிருந்தான். சண்டை ஒன்றிற்காக அணிகள் புறப்பட ஆயத்தமாகின்றன. அந்த வரிசையில் அவனும்... 'என்ன சாண்டோ இப்பதான் வந்த நீ 'ரெஸ்ட்' எடுக்காம, களத்துக்குப் போகிறாய்' சிறப்புத்தளபதி அவனிடம் கூறுகிறார். அவனிடமிருந்து அந்த சிக்கனப் புன்னகையே விளக்கமாக அமைகின்றது. அவர் சிரித்தபடி அவனின் தோள்களில் தட்டிக்கொடுக்கிறார். ஆம் அவருக்குத் தெரியும் தூரம், பாரம் எல்லாம் அவனுக்குத் துரும்பானவை என்று. இரண்டு நாட்களின் பின் சிறீலங்கா வானொலியில் 'கருங்குளம் இராணுவ முகாமிற்குள் பயங்கரவாதிகள் இராணுவத்தினர் மீது பதுங்கியிருந்து தாக்கியதில் பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்...'

பல சந்தர்ப்பங்களில் அவனது மருத்துவப் பணி 'இயக்கம்' என்ற கட்டத்திற்கு அப்பாலும் விரிவடைந்திருந்தது. [illegible]

[illegible]



லெப். கேணல் சாண்டோ/இளவள்ளால்
முத்துலிங்கம் அமிர்தலிங்கம்
கருவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.
27-12-1971 19-05-2000

# களமருத்துவப் பயிற்சியை நிறைவுசெய்தவனை சிறப்புத் தளபதி சந்தித்துக் கதைத்தபோது 'எல்லாச் சண்டைக்கும் என்னை விடோணும்' என்பது மட்டுமே அவனது ஒரே கோரிக்கையாக இருந்தது

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்




07-07-2001 அன்று நெடுங்கேணி சிலோன் தியேட்டர் பகுதியில் சிறீ லங்கா இராணுவத்துடனான எதிர் பாராத மோதலில் துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை**
**விவேகானந்தராசா**
தில்லையம்பலம்
விவேகராசா
**முல்லைத்தீவு**

15-07-2001 அன்று முகமாலைப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில் விழுப்புண்பட்ட எல்லைப்படை வீரர் ஒருவர் 19-07-2001 அன்று வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை**
**அருணகிரிநாதர்**
**விஜய பாஸ்கரன்,**
*யாழ்ப்பாணம்.*
***த.மு: இல:83,***
***வன்னேரிக்குளம் கிளிநொச்சி.***

13-07-2001 அன்று மணலாறு கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிற்கும் கோட்டைக்கேணி இராணுவ முகாமிற்கும் இடையில் அமைந்துள்ள இராணுவக் காவலரன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை**
**சுப்பிரமணியம்**
**மதிவண்ணன்**
யாழ்ப்பாணம்
***த.மு: விஜி வீதி,***
***முழங்காவில், மன்னார்.***

20-07-2001 அன்று வெடிவைத்தகல் பகுதியில் இராணுவத்துடனான மோதலில் துணைப்படை வீரர்கள் இருவர் வீரச்சாவடைந்துள்ளனர்.

**துணைப்படைவீரர்**
**சந்தனம் ஜெயசங்கர்**
நாலாம்கட்டை, பேராறு
ஒட்டுசுட்டான்.

**துணைப்படைவீரர்**
**கனகலிங்கம் சத்தியசீலன்**
திருமலை
***த.மு: அத்தார் திட்டம்***
***வள்ளிபுனம்,***
***புதுக்குடியிருப்பு.***

20-07-2001 அன்று வெடிவைத்தகல் பகுதியில் இராணுவத்துடனான மோதலின்போது தமிழீழ தேசிய துணைப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை**
**சரவணபவான்**
இரத்தினசிங்கம் சரவபவான்
(முருகன் கோவிலடி,
பெரியபுளியங்குளம்)
***த.மு: பாஸ்கரன் குடியிருப்பு***
***ஆலங்குளம், துணுக்காய்.***

24-07-2001 அன்று வன்னிமாவட்டத்தில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் துணைப்படைவீரர் ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**துணைப்படைவீரர்**
**தட்சணா மூர்த்தி**
**சதீஸ்குமார்**
மதனி குடியிருப்பு, வேரவில்
கிராஞ்சி பூநகரி.

29-07-2001 அன்று சிலோன் தியேட்டர் பகுதியில் சிறீலங்கா இராணுவத்துடனான மோதலில் விழுப்புண்பட்ட போராளி ஒருவர் 30-07-2001 அன்று வீரச்சாவடைந்துள்ளார்.

**மேஜர் பரஞ்சோதி - பரன்**
கணபதிப்பிள்ளை ரதன்
வவுனியா.
***த.மு: 1ம் வட்டாரம்,***
***மன்னியவளை.***

01-08-2001 அன்று முள்ளிக்குளம் பகுதியில் பதுங்கி இருந்த இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்துள்ளார்.

தமிழீழ காவல்துறையின் சிறப்புப் படையணி உறுப்பினர்
**காந்தராசா வசிகரன்**
**பூங்கண்ணன்**
**திருமலை.**
***த.மு: திலக்கண்ணாச்சி***
***திட்டம் பெயர்ப்பலகை***
***அருகில்,***
***புதுக்குடியிருப்பு.***

02-08-2001 அன்று நாகர்கோவில் பகுதியில் ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**லெப். அழகுநேயன்**
**சின்னத்துரை நேசராசா**
**அம்பாறை.**

21-08-2001 அன்று அதிகாலை அம்பாறை மத்திய முகாம் பொலிஸ் நிலையம் மீதான வெற்றிகரத்தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**மேஜர் கோகுலன்**
**நாகராசா நவநீதன்**
**அம்பாறை**

**வீரவேங்கை பவித்திரன்**
**கோகுலதாசன் கவிதாசன்**
**அம்பாறை.**

---

கிறான். அடுத்தநாள் அத்தாயும், தந்தையும் முகாமிற்கு வருகின்றனர். கண்களில் கண்ணீரில்லை, கைகளில் கற்கண்டு. 'நான் யாழ்ப்பாணத்தில நிற்கக்குள்ள இது சம்மந்தமா கொஞ்சம் படிச்சனான்' அவன் அந்த அமைதியான புன்னகையோடு விளக்கினான்.

யாழ். குடாநாட்டிலும், வன்னிப்பெருநிலப் பரப்பிலும் இடம்பெற்ற பெரும் சமர்களில் அவனது ரி-56-2வும் பங்கெடுத்துக்கொள்கின்றது. ரவை பதிந்து எலும்புடைந்த காலுடன் இச்சமர்க்களமெங்கும் அவன் சலிப்பின்றி நடந்தான். இறுதியில் முழுநேர சமர்க்களப் போராளியாக விரும்பியவன் தளபதியிடம் அதனை வெளிப்படுத்தினான். கோரிக்கை விவாதங்களின் பின் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேஜர் தர கட்டளை அதிகாரிகள் பயிற்சி நெறியொன்றில் அவன் இணைக்கப்படுகின்றான். அங்கும் அவன் 'அமைதியான' சண்டோவாகவே இனங்காணப்படுகிறான். அவனது பிறருக்குதவும் பண்பு, கடும் உழைப்பு, பட்டறிவு என்பன அப்பயிற்சிக் கல்லூரிப் போராளிகளிடம் அவனுக்கொரு தனித்துவத்தைப் பெற்றுத்தந்திருந்தன.

ஆனையிறவுப் பெருந்தளத்தை வீழ்த்த எடுக்கப்பட்ட நடவடிக்கையில் இக்கல்லூரிப் போராளிகளின் பங்களிப்பு தேவைப்பட அங்கு அவர்கள் அழைக்கப்பட்டனர். அங்கு அவன் எல்லைப்படை வீரர்களுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டு, மாசார் பகுதி காப்பரண் வரிசையில் விடப்படுகிறான். சண்டை ஆரம்பமானதும் சண்டையின்போதான வெடிபொருள் வழங்கற்பணிக்காக, ஒரு பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்படுகின்றான். ஆனையிறவு கைப்பற்றப்பட்ட நிலையில் அங்கு செல்கிறோம். இயக்கச்சியில் ஒரு வீதியில் வாகனக் கண்ணிவெடிகளை அகற்றும் வேலையில் அவன் மும்முரமாக ஈடுபட்டிருந்தான். அங்கு பத்திற்கு மேற்பட்ட கண்ணிவெடிகள் அவனால் அகற்றப்பட்டு செயலிழக்கச்செய்யப்பட்டுக் கிடந்தன.

'இந்த ரோட் சப்ளைக்கு நல்லம் அது தான்...' 'அதுசரி எப்ப கண்ணிவெடி பிரிவில சேர்ந்நீங்க' பம்பலாக கேட்கிறோம். 'பிரச்சினையில்ல கல்லூரியில திறமா பயிற்சி தந்தவங்க அதையும் பயன்படுத்தி பாப்பம் எண்டு தான்' அந்த வழமையான புன்னகையுடன் அவன் பதிலளிக்கிறான். தொடர்ந்து அவன் ஒரு குழுவிற்குப் பொறுப்பேற்று பணிநோக்கி முன்னகர்ந்து சென்றான். பின் மீளவும் அவர்கள் தத்தம் படையணிகளுக்குத் திரும்ப அவனும் தான் சார்ந்திருந்த ஜெயந்தன் படையணிக்குத் திரும்பி யாழ் நோக்கிய தாக்குதலுக்காக கொம்பனி ஒன்றிற்குப் பொறுப்பேற்கிறான்.

சாவகச்சேரியைக் கைப்பற்றும் நோக்கில் படையணிகள் விரைகின்றன. இடைவந்த எதிர்ப்புக்களை முறியடித்து அவனது கொம்பனி மட்டுவிலை அடைகின்றது. அங்கு எதிரியின் எதிர்ப்புக்களை முறியடித்தபடி அவ்வணி முன்னேறிக்கொண்டிருக்கையில், இராணுவ விசேட படையினரின் ஒரு முகாம் எதிர்ப்பட அங்கு சண்டை வலுக்கிறது.

சில போராளிகள் வீரச்சாவடைய பலர் காயமடைகின்றனர். நிலைமை இன்னும் இறுக்கமாகவே இருக்கிறது. உடனடியாக நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருமாறு சிறப்புத் தளபதியிடமிருந்து இறுக்கமானதொரு கட்டளை கிடைக்கிறது. வலுவான எதிர்ப்பு வந்துகொண்டிருக்கும் அந்தப் பகுதியை அவன் நிதானமாகப் பார்க்கிறான். அடுத்து என்ன நடக்கும் என அனைவருக்கும் தெரிந்ததால் முடிந்தவரை அவர்கள் அவனுக்கு காப்பு வழங்குகின்றனர். இரு கைக்குண்டுகளின் வெடிபோசையைத் தொடர்ந்து எதிர்ப்பு வலுவிழக்கிறது. மட்டுவில் மட்டுமல்ல சாவகச்சேரியும் கைக்குள் வருகின்றது. ஆனால் அந்த வீரன்...

'சாண்டோண்ணைக்கு சண்டை அறிக்கை எடுக்கிறதெண்டா ரெண்டு தான் வேறுபாக வேணும்' அறிக்கைப் போராளிகள் அலுத்துக் கொள்வதுண்டு. ஆம் தமிழீழத்தின் பரந்த பரப்புக்கள் யாவும் கலம்கண்டவன்.

தம்பிலுவில், திருக்கோவில் தேசத்துரோகிகள் முகாம் தாக்குதல், பழுகாமம் தேசத்துரோகிகள் முகாம்தாக்குதல், 12ம் கொலனி இராணுவ முகாம் தாக்குதல், அருந்தலாவ பொலிஸ்முகாம் தாக்குதல், வெண்டுகல்சேனை பதுங்கித் தாக்குதல், மண்முனை இராணுவம் மீதான பதுங்கித் தாக்குதல், பாணமைவெட்டை இராணுவம் மீதான பதுங்கித்தாக்குதல், உன்னிச்சை இராணுவ ரோந்து மீதான தாக்குதல், புணானை இராணுவம் மீதான தாக்குதல், பின்னைபாறு இராணுவ முகாம் தாக்குதல், குவாட்டன் இராணுவ முகாம் தாக்குதல், சிங்கபுர ரோந்து மீதான தாக்குதல், கொழுத்திமடு ரோந்து மீதான தாக்குதல், கொழும்பு வீதி ரோந்து மீதான தாக்குதல், கள்ளியந்தீவு ரோந்து மீதான தாக்குதல், குசிதலையில் ரோந்து மீதான தாக்குதல், கட்டுவளில் இராணுவ ரோந்து மீதான தாக்குதல், பொலநறுவை இராணுவ ரோந்து மீதான தாக்குதல், கடுக்குறிஞ்சு எல்லைக் முகாம் மீதான தாக்குதல், பூலாக்சேனை இராணுவ முகாம் தாக்குதல், கடுக்குறிஞ்சு இராணுவ முகாம் தாக்குதல், தாலைக்குள இராணுவ முகாம் தாக்குதல், வெண்டுகல்சேனை இராணுவ முகாம் தாக்குதல், சூரியக்கதிர், சத்ஜய, ஜெயசிக்குறு ஓயாத அலைகள்... என அந்தப் பட்டியல் இன்னும் விரியும். பாடுமீன் நாட்டின் பாசறை ஒன்று அவனை புடம்போட்டு போராளியாக்கியது. யாழ். நாட்டின் மட்டுவில் மண் அவனை மாவீரனாக்கியது. 'சாண்டோ அமைதியான வன்தான் ஆனால் கலங்களில்லல்ல'

> **அன்று மதியம் மருந்துவப் பகுதியில் அவிந்த இறைச்சி வழங்கப்பட்டதாக அறிகிறோம். இதுபற்றி அவனிடம் கேட்டபோது, 'ஒண்டும் அப்பிடல, ஒரு பெரிய கவறுகொய்யா' பிடிச்சனான்' அதிர்ந்து போனோம் நாம். நச்சுப்பிராணி என ஒதுக்கும் பிராணி. 'உரிக்கப்பார்த்தன் வர்த்துப்பக்கம் நிலப்பை போல இருந்தது. எடுத்துப்போட்டு அவிச்சு சாப்பிட்டும் பார்த்தன் கனநேரம் ஒண்டும் செய்யல்ல அதுதான்...'**

# சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி

'தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமது முதலாவது சிறப்புப்படையணி ஒன்றை பெற்றெடுத்துள்ளது. இதற்கு சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி எனப்பெயர் சூட்டியுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இப் படையணியின் பிறப்பு எம் விடுதலை இராணுவத்தின் உயர்ந்த வளர்ச்சி ஒன்றைச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

இது தமிழீழப் போராட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சரித்திர நிகழ்ச்சியாகும்.

பயிற்சி, தந்திரம், துணிவு, வெற்றி என்ற தலைவர் பிரபாகரனது வார்த்தைகளைத் தாரக மந்திரமாக இப்படையணி கொண்டுள்ளது.

இச்சிறப்புப் படையணியின் பிறப்பை உலகிற்குப் பிரகடனப்படுத்துவதுடன் அன்பிற்குரிய எமது மக்களுக்கும் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்' என கடந்த பத்து ஆண்டுகளின் முன் விடுதலைப் புலிகள் பத்திரிகையில் வந்த அறிமுகத்திற்குரியவர்களின் போரியல் வளர்ச்சிகள் இன்று எங்கள் எல்லோரது வியப்பிற்கும் கவனத்திற்கும் உரியனவாகின்றன.

தமிழீழ விடுதலைப் போர்ப்படையின் செயல்திறன் மிக்கதொரு மரபுப் படையணியாக இன்று உயர்ந்து நிற்கும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி தன் நாமத்திற்குரியவரான லெப். சீலன் (சாள்ஸ் அன்ரனி) அவர்களின் பதினெட்டாம் ஆண்டு நினைவில், வெற்றிகள் நிரம்பிய தன் பத்தாண்டுப் போர் வாழ்வைப் பூர்த்திசெய்து, அவர் தடங்களைத் தொடர்கின்றது. படையணி தொடங்கப்பட்ட சில மாதங்களிலேயே அதற்கான முதலாவது போர்ப் பிரவேசம் கிடைத்தது. 1991இல் பெரும் ஏற்பாடுகளுடன் வன்னியை ஆக்கிரமிக்கும் நோக்கில் முன்னேறிய 'வன்னிவிக்கிரம' படைகளை எதிர்கொண்டு தனது முதற் சமர்க்களத்தை ஆரம்பித்து வைத்தது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.

மரபுப் படையணியக்குரிய போர் அம்சங்களுடன் களமிறங்கி, முன்னேறிய இராணுவத்தை எதிர்கொண்டு தாக்கியழித்து, பின்வாங்கி ஓட வைத்தது மாத்திரமின்றி, விமான எதிர்ப்புப் பீரங்கிகள் கைவசம் அற்ற அன்றைய சூழலில் தனது கனரக ஆயுத அணியினரின் அசாத்தியமான திறமைமூலம், உலங்குவானூர்தி ஒன்றையும் சுட்டு வீழ்த்தி தனது முதற்களத்தை தலைவரின் பாராட்டுக்குரிய சாதனைகள் மூலம் வெற்றிகொண்டது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.



அதன்பின் புலிகளின் மரபு இராணுவ வலுவை உலகிற்கு எடுத்துரைத்த 'ஆகாய கடல் வெளிச்சமர்' நடவடிக்கைகளில் பிரதான பங்கெடுத்தது. அச்சமரில் படையணியின் அப்போதைய சிறப்புத் தளபதி பால்ராஜ் வழிநடத்திய களமுனைகளில் அவருடன் செயற்பட்டு புலிகளின் மரபுப் போர் சக்தியை உலகிற்கு நிரூபிக்க காரணியாய் இருந்தது.

இரண்டாம்கட்ட ஈழப்போரின் பல போரரங்குகளிலும், குறிப்பாக தமிழர் தாயகத்தின் இதயபூமியான மணலாற்றுப் பகுதிகளை எதிரி ஆக்கிரமிக்க மேற்கொண்ட 'ஒப்பறேசன் மின்னல்', 'ஒப்பறேசன் கஜபகர' போன்ற நடவடிக்கைகளுக்கு எதிரான சமர்களிலும், மற்றும் புலிகளினால் பெயர்சூட்டி நடாத்தப்பட்ட 'இதயபூமி-1' 'தவளை' போன்ற வெற்றிகர தாக்கியழிப்பு யுத்தங்களிலும் செயற்பட்டு, ஒரு மரபுப் படையணி என்றவகையில் அனைத்து இராணுவ நெருக்கடிகளையும் முன்நின்று எதிர்கொண்டு இரண்டாம் கட்ட ஈழப்போரின் சாதனையாளர்களாக, தாங்கு சக்தியாக திகழ்ந்தவர்கள் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியினர்.

இதேவேளை விரிவடைந்த 1994ஆம் ஆண்டின் பின்னான மூன்றாம்கட்ட ஈழப்போரில் பல சரித்திர முக்கியத்துவம் பெற்ற சமர்களை, பிரதான சமரணிகளாகச்சென்று நிகழ்த்திக் காட்டியதன் மூலம் இறுக்கமான யுத்த நிலைமைகளை உடைத்தெறியும் படையணி என அனைவராலும் மானசீக [illegible]க்கப்படுபவர்களாக மாறினார்கள்.

ஓயாத அலைகள்-1 முல்லைத்தள மீட்புச் சமரில் பிரதான முகாமைத் தாக்கியழிப்பதற்கான சமரணியாக தலைவர் அவர்களினால் நம்பிக்கையுடன் களமிறக்கப்பட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி கடினங்கள் பல நிறைந்த தனது குறியிலக்கை வெற்றிகொண்டு இறுதியில் புலிகளின் இன்றைய மரபுப்போர் வளர்ச்சியின் முதுகெலும்பாகத் திகழும் கனரக ஆட்டிலறிகள் இரண்டையும் கைப்பற்றியது. பெருமைமிகு இந்த வரலாறு புலிகளின் முதலாவது மரபுப்படையணியினரையே சாரும்.



முதல் தாக்குதல் தளபதி லெப். சீலன்

சிங்களத்தின் ஜெயசிக்குறு பாதை பிடிப்புச் சமரின் கனவுகளையெல்லாம் சிதறடித்து, அவர்களை வன்னிக்காடுகள் எங்கும் அலையவிட்ட புலிகளின் புகழ்பூத்த புளியங்குளம் சமர் அரங்கில் பிரதான தாக்குதல் அணியாக இராணுவத்தை எதிர்கொண்டு, ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் நீட்சியால் நெருக்கடிக்குள் சிக்கியிருந்து வன்னித்தளத்தின் இறுக்கத்தை உடைத்தெறிந்த கிளிநொச்சி தளம் மீதான ஓயாத அலைகள் 2 சமரிலும் முகாமை வீழ்த்தி வெற்றிகொள்ள காரணியாய் இருந்த கடினம் நிறைந்த முன்னணிப் பிரதேசங்களைக் கைப்பற்றி சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு ஆற்றிய காத்திரமான சமர்ப் பங்களிப்புக்கள் மறக்கமுடியாதவை.

ஓயாத அலைகள் 3 தொடர் நடவடிக்கையில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி முன்சென்று சாதனைகள் படைத்த களங்கள் பல. ஆனையிறவு இராணுவத் தளத்தில்

## மீண்டும் ஒரு மிக்–27

கட்டுநாயக்க விமானப்படைத் தளம் மீது, கடந்த மாதம் 24ம் திகதி மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் அதிர்ச்சியில் இருந்து, இழப்பின் வலியில் இருந்து மீள்வதற்கிடையில் சிறீலங்கா விமானப்படைக்கு மற்றுமொரு இழப்பு. சிறீலங்காவிற்கு கனவிலும் எதிர்பார்த்திராத மோசமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ள கட்டுநாயக்க விமானப்படைத்தளத் தாக்குதல் நடந்து மூன்று வாரங்கள் கழித்து, மற்றுமொரு மிக்-27 விமானத்தை சிறீலங்கா விமானப் படை இழந்திருக்கின்றது. கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் இருந்து பயிற்சிக்குப் புறப்பட்ட மிக்-27விமானம், சீதுவையில் பொதுமக்களின் வீடுகள் மீது வீழ்ந்து நொறுங்கியது. மூன்று வீடுகள் சேதமடைந்தன. ஏழு பொதுமக்கள் எரிகாயங்களுக்கு உள்ளாகினர். விமானத்தை ஓட்டிச் சென்ற உக்கிரேன் நாட்டைச் சேர்ந்த பயிற்சியாளரும் விமானத்துடன் சிதறி மாண்டார். தமிழ் மக்களிற்கு எதிரான சிங்கள விமானப்படை நடவடிக்கைகளுக்கு வேற்று நாட்டவரும் துணைபோவது தெரிந்ததே. சிறீலங்காவில் ஏற்பட்ட விமான விபத்துக்களில் இதுவரை மூன்று உக்கிரேனியர்கள் உயிரிழந்துள்ளனர் என, சிறீலங்கா விமானப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இயந்திரக் கோளாறே இதற்குக் காரணம் என, சிறீலங்கா அரசு அறிவித்திருக்கின்றபோதும், இந்த விமானம் எப்படி வீழ்ந்து நொறுங்கியது? இயந்திரக் கோளாறா? அல்லது விடுதலைப் புலிகளின் தாக்குதலா? என்பது குறித்து சிறீலங்கா பாதுகாப்பமைச்சகத்திற்கு இன்னமும் குழப்பம் நீங்கியதாகத் தெரியவில்லை. 'இயந்திரக் கோளாறு என்றே நம்புகின்றோம். ஆனால், விடுதலைப் புலிகளின் தாக்குதல் சாத்தியக்கூறுகள் குறித்த சந்தேகங்களை நிராகரித்துவிட முடியாது' என, சிறீலங்காவின் உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பாதுகாப்புக் கவசங்களாக இருந்த பரந்தன் உமையாள்புரம் பிரிகேட் தளங்கள் மீதான தாக்குதல் இவற்றில் குறிப்பிடப்பட வேண்டியவை. ஆனையிறவு மீட்பிற்கான புலிகளின் வியூகங்கள் தயார்ப்படுத்தப்பட்ட நிலையில், படையினர் பரந்தன் உமையாள்புரம் தளங்கள் மீதான புலிகளின் பாய்ச்சலை எதிர்பார்த்திருந்தனர். அதேவேளையில் வேகமானதொரு திட்டமிடலை நிறைவு செய்யும் முகமாக, புலிகளின் போர் வரலாற்றிலேயே முதன் முதலில் ஒரு பகற்பொழுதுச் சமரை பரந்தன் உமையாள்புரம் இராணுவத் தளங்கள் நோக்கி ஆரம்பித்தன புலிகளின் படையணிகள். இந்தச் சமரின் பிரதான அணியாக தளத்தினுள் ஊடுருவி, சாதகமற்ற களச் சூழலில் சமராடி தளத்தை வீழ்த்திய பெருமை சாள்ஸ் அன்ரனி படையணியைச் சாரும்.

பின்னர் ஆனையிறவு மீட்பிற்கான இறுதி முற்றுகைக்காக குடாரப்புவில் தரையிறங்கி இரகசிய நகர்வு மூலம் இத்தாவிலப் பகுதியை ஊடுருவி புலிகள் ஏற்படுத்திய இராணுவ முன்னேற்றங்களை முறியடித்து, இராணுவ வலயத்தினுள்ளே புலிகள் அமைத்த போர்சூழைகயைத் தக்கவைத்து வெற்றியீட்டிய புலியணிகளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி ஆற்றிய பங்கு காத்திரமானது.

மரபுப்போர் அணியாக, எதிரியின் பெருமெடுப்பிலான இராணுவ ஆக்கிரமிப்பு நகர்வுகளை தடுத்துநிறுத்தி, வெற்றி கொண்டதுமுதல், போராட்டத்திற்கான முதலாவது மரபுசார் ஆயுதங்களை எதிரியிடமிருந்து கைப்பற்றியது. ஆனையிறவு, பரந்தன் கூட்டுப்படைத்தளத்தினுள் ஊடுருவி, எதிரி வன்னிமீதான தன் அடுத்தகட்ட இராணுவ நகர்விற்கு ஏற்பாடு செய்திருந்த 'நடவடிக்கை இயங்கு தளத்தை' தாக்கியழித்து பதினொன்றிற்கும் மேற்பட்ட ஆட்லெறிகளையும் அழித்து ஒரு மரபுப் படையணியாக தனித்துவமான தமது போராற்றலினால் சாள்ஸ் அன்ரனி படையணியின் போராளிகள் செய்த அற்புதமான சாதனைப் பட்டியல் தொடர்கின்றது. இதேவேளை, தலைவர் அவர்களின் நேரடிக் கட்டளையின்படி திருமலை, யாழ்ப்பாணம் போன்ற இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் படையணி செயற்பட்ட களங்கள் போராட்ட வரலாற்றில் மிகவும் முக்கியத்துவமானவை. திருமலையின் காட்டுப் பகுதிகளை ஆக்கிரமித்து, அதன் மூலம் மொத்தமான திருமலை மண்ணையே ஆக்கிரமித்துவிட வந்த எதிரிகளின் 'ஒப்பரேசன் ராமசக்தி-3' நடவடிக்கையைத் தனித்துநின்று முறியடித்து சாள்ஸ் அன்ரனி படையணி திருமலை மண்ணிலும் காத்திரமான தன் வெற்றித் தடத்தைப் பதித்தது குறிப்பிடத்தக்கது.

'காலத்தின் தேவையை மிகச் சரியாக மதிப்பீடு செய்து, ஒப்பற்ற ஒரு வீரனின் பெயரில் உருவாக்கப்பட்ட இப்படையணி, போர்க்களங்களில் சாதித்தவை ஏராளம். வடமுனைப் போர்க்களங்களில் மட்டுமல்ல தென்முனையின் திருமலைப் பகுதியிலும் களமாடிய வரலாறு அதற்கு மேலும் சிறப்புச் சேர்ப்பதாய் அமைகிறது' என படையணியின் போரியல் சாதனைகளை எண்ணி வாழ்த்துக் கூறுகின்றார் மூத்த தளபதி கேணல் கருணா.



'வீரத்தை மூலதனமாகக்கொண்டு இந்தப் படையணி தமிழீழப் போரரங்குகளில் பல முக்கிய சமர்களில் காத்திரமான பங்கெடுப்பைச் செய்துவருகின்றது. அடைந்த எல்லா வெற்றிகளின் பின்னாலும் இந்தப் படையணியின் போராளிகளதும், தளபதிகளினதும் அசாத்திய வீரமும், தியாகமும், உயர் அர்ப்பணிப்பும் நிரம்பியிருக்கின்றது. வீரச்சாவடைந்துவிட்ட ஆயிரம் வரையிலான போராளிகளினதும், தளபதிகளினதும் முன்னுதாரணங்களே இன்று வரையான இந்தப் படையணியின் வெற்றிகளுக்கும் செயல் வேகத்திற்கும் காரணம் என்றால் அது மறுக்கமுடியாது' எனக் கூறுகிறார் படையணியின் சிறப்புத் தளபதியாக இருந்து இன்று விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதிகளில் ஒருவராக உயர்ந்து நிற்கும் கேணல் தீபன் அவர்கள்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் முதலாவது சிறப்புத் தளபதியாக தலைவரால் நியமிக்கப்பட்டவரும், இன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டளைத் தளபதிகளில் ஒருவராக இருப்பவருமான மூத்த தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் கூறும்போது,

'இன்றுவரை இந்தப் படைப்பிரிவினுடைய தளபதிகள், அணித்தலைவர்கள், போராளிகள் எவ்வாறு யுத்த களங்களில் தலைவருடைய திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து உறுதியான, போராற்றல் மிக்க, தற்துணிவு நிரம்பிய வீரர்களாக செயற்பட்டார்களோ, அவர்களுடைய வழிகாட்டல்களை, அவர்கள் விட்டுச்சென்ற வழித்தடங்களைப் பின்பற்றி, இந்தப் படையணி இதுவரை தமிழீழப் போரரங்கில் சாதித்தவற்றைப்போல் இரண்டு மடங்கு சாதிக்கவேண்டும்' எனக் கூறிப் போராளிகளை உற்சாகப் படுத்துகின்றார்.

இன்று தமிழீழ சமரரங்குகளில் ஒரு முன்னோடியான மரபுப்படையணியாக, சமர்களுக்கான திறவுகோலாக செயற்படும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தன் உருவாக்கத்தின் மூலம் எம் போராட்ட வடிவத்தில் புதியதொரு பரிமாண வளர்ச்சியைத் தந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

கெரில்லாப் போர் வடிவத்திலிருந்து மரபு இராணுவமாக மாறிய எம் போராட்ட பரிணாமத்தின் மூலவேராக இருந்தது. சமரரங்குகளில் எதிரிகள் ஏற்படுத்திய எத்தனையோ சவால்களையும், நெருக்கடிகளையும் தனக்கேயுரிய தனித்துவமான நெஞ்சுறுதியுடன் எதிர்கொண்டு சாதனைகளுக்காய் சரித்திரமாகிவிட்ட வீரர்களின் தியாகத்தாலும், உயர்ந்த செயற்திறனாலும், அர்ப்பணிப்பு நிரம்பிய வீரத்தாலும் முதன்மையானதொரு படைப்பிரிவாக சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டலில் இன்று உயர்ந்து நிற்கின்றது. 'எங்களுக்கு ஏற்பட்ட பெரிய இராணுவ எதிர்ப்புக்களை எல்லாம் இந்த விசேட படைப்பிரிவை பயிற்றுவித்ததன் மூலம் எங்களால் தடுத்து நிறுத்தமுடிந்தது. பெரியளவிலான தாக்குதல் நடந்த சந்தர்ப்பங்களிலும், மாறும் எமது வலிந்த தாக்குதல்களிலும் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவை ஈடுபடுத்தி நாங்கள் பெரிய வெற்றிகளை எடுத்தோம். உங்களுடைய காலத்திலும் நீங்கள் பெரும் இராணுவ வெற்றிகளை ஈட்டுபவர்களாகத் திகழவேண்டும்' என 1994ஆம் ஆண்டு படையணிப் போராளிகளின் மத்தியில் படையணியின் சாதனைகளைச் சொல்லி வாழ்த்துக் கூறிய தலைவர் அவர்கள், இன்று தனது பத்துவருடப் போர்வாழ்வைக் கடந்து சாதனைக் களங்கள் நோக்கி வெற்றி நடைபோடும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை அதன் பத்தாவது ஆண்டு நிறைவில் வாழ்த்தி அதன் பத்தாண்டு பதிவுகளைச் சொல்லும் 'நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகள்' என்னும் நூலிற்கு வழங்கிய ஆசிச் செய்தியிலிருந்து:

'எமது விடுதலை இயக்கத்திற்கும், எமது இயக்கத்தால் முன்னெடுக்கப்படும் எமது தேச விடுதலைப் போராட்டத்திற்கும் ஒரு மகத்துவமான வீரவரலாறு உண்டு. அந்த வீரவரலாற்றை நாமே படைக்கிறோம். நாமே எமது வீரவரலாற்றின் கதாநாயகர்கள்.

பத்து ஆண்டுகளுக்குள் சாள்ஸ் அன்ரனி படையணி சிறுவிதையாக முளைத்து பெரு விருட்சமாக எழுந்து நிற்கின்றது. இந்த வளர்ச்சிக்கு இப்படையணியிலிருந்து விடுதலைக்கு வித்தான வீரத்தளபதிகளதும் போராளிகளதும் அர்ப்பணிப்புக்கள்தான் ஆதாரமானவை. இந்த விடுதலை வீரர்களது கனவுகளோடு, வெற்றிகளைக் குவித்துச் செல்லும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தனது விடுதலைப் பாதையில் தொடர்ந்தும் முன்னேறிச் செல்ல எனது வாழ்த்துக்கள்'

# அமைச்சரின் பிழையான செய்தியும் விடுதலைப் புலிகளின் சரியானபதிலும்

மடுமாதா ஆலயத்தின் ஆவணித் திருவிழா வழமைபோல இவ்வாண்டும் பெருந்திரளான பக்தர்கள் கூடி சிறப்பாகக் கொண்டாடினர். தீவின் தென்பகுதியில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டனர். மடுமாதா ஆலய வருடாந்தத் திருவிழாவிற்கு, சிறீலங்காவின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் சென்றிருந்தார்.

விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சராக இருக்கும் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே கிறிஸ்தவ மத விவகார அமைச்சராகவும் இருக்கின்றார்.

மடு சென்ற அவர், கொழும்பு திரும்பியதும் பரபரப்பூட்டும் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். சர்வதேச செய்தியூடகங்களும் அவரால் வெளியிடப்பட்ட பரபரப்பூட்டும் அறிக்கையை முக்கியத்துவப் படுத்தி வெளியிட்டன.

விடுதலைப் புலிகளுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், தனது வன்னி விஜயத்தின்போது விடுதலைப் புலிகளால் தமக்கு முழுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்திருந்தார். தாம் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடவில்லை எனவும் அமைதியுடனும் கௌரவத்துடனும் வாழவே ஆயுதம் ஏந்திப் போராடுவதாகவும் விடுதலைப் புலிகள் தன்னிடம் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

சிறீலங்காவின் அமைச்சர் ஒருவர் பதினொரு ஆண்டுகளின் பின் முதல்தடவையாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் எனத்தலைப்பிட்டு, ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டது. இதுபோன்று சர்வதேச செய்தி ஊடகங்களும் இதே பாணியில் செய்தி வெளியிட்டன.

சமாதான முனைப்புகள் முனைமழுங்கிப்போக, போர் முனைப்புப்பெற்று, சிறீலங்காவின் விமானப்படைத்தளம் தாக்குதலுக்கு உள்ளான நிலையில், சிறீலங்காவின் பொருளாதாரம் மிகமோசமாகச் சரிந்துவரும் நிலையில், சர்வதேச வர்த்தக உறவுகள் சீர்குலைந்து சின்னாபின்னமாகியிருக்கும் நேரத்தில், அமைச்சரின் இந்த அதிரடி அறிக்கை வெளிவந்திருக்கின்றது. அத்துடன் சந்திரிகா அரசு, மோசமான அரசியல் நெருக்கடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் நிலையில் இவ்விதமான பொய்யான செய்தியொன்று புனையப்பட்டிருக்கின்றது.

சிறீலங்கா ஒரு ஆபத்தான நாடாக சர்வதேச மதிப்பீடுகளுக்கு உள்ளான நிலையில், சமாதானம் குறித்த அர்த்த மற்ற நம்பிக்கை ஒன்றை ஏற்படுத்தும் விதமாகவே அமைச்சர் இந்தவகையில் நடந்துகொண்டார் என்பது அவதானிகளின் கருத்தாக இருக்கின்றது.

அமைச்சர் பெர்னாண்டோ புள்ளேயின் அறிக்கையை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் மறுத்துரைத்தார். விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காவின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேக்கும் இடையே எந்தவிதமான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தையும் இடம்பெறவில்லை என அவர் திட்டவட்டமாக அறிவித்தார்.

முன்னணிக் காவல் நிலைகளில் நிற்கும் விடுதலைப் புலிவீரர்கள், மடு சென்ற அமைச்சருக்கு பாதுகாப்பளித்திருக்கின்றனர் எனவும், அவர்களுடனேயே அவர் சந்தித்துக் கதைத்திருக்கின்றார் எனவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெளிவுபடுத்தியிருந்தார்.

பெரும் அரசியல் நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் சந்திரிகா அரசின் அமைச்சரால் வெளியிடப்பட்ட இச்செய்தி, சமாதானம் பற்றிய பிழையான நம்பிக்கை ஒன்றை ஏற்படுத்திடுவதாகவும் திரு. பாலசிங்கம் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.

இத்துடன் இந்தப் பிழையான செய்தியை சர்வதேச செய்தி ஊடகங்கள் முக்கியத்துவப் [illegible] வெளியிட்டமையும் அர்த்தமற்ற நம்பிக்கையை [illegible] ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் [illegible]

சிறீலங்காவின் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயால் [illegible] தொடர்பாக தவறான நம்பிக்கையை [illegible] விடுதலைப் புலிகள் [illegible] நாமே மறுத்து [illegible]

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் செய்தியை நம்பி வெளியிட்ட அனைத்துலகச் செய்தி ஊடகங்கள், விடுதலைப் புலிகளின் மறுப்பை மறுநாள் வெளியிட்டன. 'ஒரே நாளில் இல்லாதொழிந்த சமாதான நம்பிக்கை' என, அனைத்துலகச் செய்தி ஊடகம் ஒன்று தனது செய்திக்கு தலைப்பிட்டது.

# எப்படி நடந்தது இந்த அதிசயம்

எப்படி நடந்தது இந்த அதிசயம்
சத்தம் இன்றியே பெரும் சாகசம் நிகழ்ந்தது

அற்புதம் என்றும் அதிசயம் என்றும்
எத்திசை நோக்கிலும் எம்புலி வீரரின்
கற்பனைக் கெட்டாக் கதையே விரிந்தது

கழுகுகள் கூண்டோடு கருகி எரிந்தன
சில சிறகுகள் உடைய சிதறிக் கிடந்தன
எம் கூடுகள் கலைத்து நாம் குருதியில் தோய
இதுநாள் வரையும் இயந்திரக் கழுகுகள் சன்னதம் ஆடின.

சாம்பல் பூத்த மேட்டிலே நின்று, சத்தியம் செய்தனர்
சாவினை வென்ற சந்தன மேனியர்
காற்றினில் ஏறிய கரும்புலி வீரர்கள்– எதிரியின்
கோட்டையில் நுழைந்து வேட்டொலி தீர்த்தனர்.

எங்கள் கூரையிளந்தவை, குருதி குடித்தவை
கோயில், பள்ளியில் குண்டுகள் போட்டவை
தாளப்பறந்தெமை ஓடிடச் செய்தவை
சாம்பலாய் போயின சாம்பலாய் போயின

புக்காரா ஒன்று புகைத்தது என்றாலே
அப்பாடா என்று ஆர்ப்பரித்த நாங்கள்
எரிந்தது எத்தனை உடைத்தது எத்தனை
மறைந்தது எத்தனை என்ற கணக்கினை அறிய

கணனித்திரையினை கவனமாய்ப் பார்த்தோம்
கணனியை நோக்கிய கண்களின் நடுவே
உருக்குலையாமல் ஓர் ஊர்தி தெரிந்தது

மனம்சோர்ந்திட மறுபடிதேடல்
தேடல் தொடர செய்திகள் கிட்டின

அது வேற்றுநாட்டுப்பறவை, அதை விட்டுவிடுமாறு
காட்டிற்குள் இருந்து கரிகாலன் செய்தி

எப்படி நடந்தது இந்த அதிசயம்
எத்திசை நோக்கினும் கழுகுகள் எரிந்த கதையே வந்து
செவிவழிபுகுந்து தேனென இனித்தது

கழுகுகள் எரிந்த கதையைக்கேட்டு
இனிப்புக் கொடுத்து எம் இனமே மகிழ்ந்தது

மற்றவர் மகிழ மரணத்தை வென்றவர்
வித்துடல் மட்டும்... ஓடுபாதையில்...
'ரேட் ஒன் என்ரபே' 'பேர்காயா' இவை மட்டுமல்ல
'கொலிவூட்டின்' காவியங்கள் – நாளை
கொழும்பு விமானத்தளமும் 'கொலிவூட்டில்' பேசப்படும்
அப்போதும் எப்போதும் பலகோடி விழிகள் தம் விழிநீரால்
எம் புலிவீரர் தாள்களை பூசிப்பர் உறுதி.

உமைபாலன்–நோர்வை



## இத்தாலியில் பொங்குதமிழ் எழுச்சிவிழா



தமிழர்களின் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் ஆகியவற்றை வலியுறுத்தி தமிழர்கள் வாழும் நாடெங்கிலும் நடைபெற்றுவரும் பொங்குதமிழ் எழுச்சிவிழா நிகழ்வுகள் கடந்த [illegible] 2001 ஞாயிற்றுக்கிழமை இத்தாலியின் பலேர்மோ மாநகரில் மிகவும் சிறப்பாக எழுச்சியுடன் நடைபெற்றது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் குண்டுகளால் அழிக்கப்பட்டு இன்றும் கலாச்சார [illegible] அம்சங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் SPASIMO அரங்கில் மாலை 6.00 மணிக்கு உயிரிலும் மேலான தாயகத்தின் மலர்விற்காக தமது இனிய இளமை உயிர்களை அர்ப்பணித்த மாவீரர்களுக்காகவும் இனவாத அழிப்பில் சிக்கி உயிரிழந்த மக்களுக்காகவும் அகவணக்கம் செலுத்தி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து உரைவேளையில் சுத்தாலியா தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. இருதயதாசன் அவர்களும் வத்திக்கான் வானொலி தமிழ்ப்பணிப் பொறுப்பாளர் அருட்தந்தை திரு. ஆரோக்கியசாமி அவர்களும் உரையாற்றினார்கள்.

புலம்பெயர் மண்ணில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை தடை செய்யும் நோக்குடன் இத்தாலியில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுச் செயற்பாட்டாளர்கள் மீதும் தொடரப்பட்ட வழக்கில் தொடர்ந்து வாதாடி தமிழ் மக்களின் பக்கம் நீதியை நிலைநாட்டித் தந்த இத்தாலிய வழக்கறிஞர் திரு. வின்சன்சோ ஜெர்வாசி (Vincenzo Gervasi) அவர்களும் உரையாற்றினார்.

அடுத்து பொங்குதமிழ் எழுச்சி உரையை திரு. பூவின் அன்ரனிப்பிள்ளை அவர்கள் நிகழ்த்தி பொங்குதமிழ் எழுச்சிப் பிரகடனத்தை வெளியிட்டுக் குரல் கொடுக்க எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து தமிழீழ மக்களும் உரக்கக் குரல்கொடுத்து உரிமைக் குரலை வெளிப்



படுத்தினார்கள்.

இறுதியாக எழுச்சிமிக்க பொங்குதமிழ் விழாவின் தமிழிசைப்பாடலை திரு. புஸ்பவனம் குப்புசாமி குழுவினரின் புரட்சிப் புலவர் காசிஆனந்தன் இயற்றிய பாடல் நிகழ்வின் இடையே பெலேர்மோ மாநகரில் இருந்து வருகை தந்த இசைப்பாடகரும், பாடகரும் ஆகிய இத்தாலியரான திரு. மர்செல்லோ பிறிமாறியோ (Marcello Primario) அவர்கள் புஸ்பவனம் குப்புசாமி அவர்கள் பாடிய அதோ தெரிகிறது தமிழீழம் என்ற பாடலை தமிழில் பாடி தமிழ் மக்களின் பலத்த கரகோஷத்தைப் பெற்றார். 1983 யூலை கலவரத்தில் தனது தமிழ் நண்பனை இழந்துவிட்டதைப் போன்ற கற்பனையில் ஒரு பாடலை இசையமைத்துப் பாடினார்.

இவ் எழுச்சி விழாவிற்கு பலேர்மோ வாழ் தமிழ் மக்களுடன், சுத்தாலியா மற்றும் இத்தாலியின் வேற் பிரதேசங்களான லேச்சே, பொலோனியா, நாபோலி ஆகிய நகரங்களில் இருந்தும் மக்கள் வருகை தந்தனர். இவர்களுடன் இரு நூறுக்கும் மேற்பட்ட இத்தாலிய மக்களும் கலந்துகொண்டனர். இவர்களுள் அரச, அரசசார்பற்ற பிரமுகர்கள், வழக்கறிஞர்கள் பத்திரிகையாளர்களும் அடங்குவர்.

1200க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு சிறப்பித்த பொங்குதமிழ் எழுச்சிவிழா நன்றி உரையுடன் நிறைவாக நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் என்ற பாடலிற்கு மக்கள் அனைவரும் எழுந்துநின்று உணர்வுடன் கைதட்டிப்பாடி பொங்குதமிழ் எழுச்சிவிழா நிகழ்வை இரவு 10.30 மணிக்கு நிறைவுசெய்து வைத்தனர்.